விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 தை 10 செவ்வாய்கிழமை (24.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 036

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

R A M C O

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# கடின உழைப்பு வெற்றியைத் தரும்

## டாக்டர் கலாம் அறிவுரை

(யாழ்ப்பாணம்), கடின உழைப்பாலும் அறிவாலும் எந்தச் சவால்களையும் எதிர்கொண்டு வெற்றிகொள்ள முடியும் என இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் புகழ்பெற்ற விஞ்ஞானியுமான டாக்டர் அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த டாக்டர் அப்துல் கலாம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் சென்றிருந்தார். அங்கு குமார சுவாமி மண்டபத்தில் சிறப்புரை ஒன்றையும் ஆற்றியிருந்தார்.

இந்த சிறப்புரையின்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு நாட்டின் மிகப் பெரிய சொத்து இளையோர்களே. எழுச்சிய டைந்த இளைஞர்கள், யுவதிகள் அந்த நாட்டின் மிகப்பெரிய சொத்தாக மதிக்கப்படுவார்கள்.

மின்சாரம் இல்லாத வீட்டிலிருந்தே எனது கல்வியைக் கற்று வந்தேன். பகல்வேளை களில் எனது வீட்டிலும் இரவு வேளைகளில் எனது நண்பனின் வீட்டிலும் கல்வி கற் றேன். நண்பனின் வீட்டில் மின்சாரம் உண்டு.

மாணவர்களே! நான் யாராக இருந்தாலும் பரவாயில்லை (20ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு கலாமை சந்தித்தது

(யாழ்ப்பாணம்)

இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமை நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சந்தித்தது.

இதன்போது பொதுவான விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திக்கும் நிகழ்வு ஒன் றின்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின ரும் அப்துல் கலாமை சந்திக்க நேர்ந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் தெரிவித்தார்.

எனினும் இந்திய நாட்டின் குடியரசுத் தலை வராக இருந்த தமிழர், சிறந்த விஞ்ஞானி என்ற வகையில் அப்துல் கலாமை சந்தித் தமையானது பாக்கியம் என்று கருதுவதாக செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டார்.

இவ்வாறான பெரியவர்களின் விஜயம் யாழ்ப்பாணத்துக்கு கிடைத்தமை பாக்கிய மாகும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-5)

## ஐ.தே.க.தலைமைகளை ஒன்றிணைக்க முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சஜித் பிரேமதாஸவை யும் ஒன்றிணைப்பதற்கு தான் உறுதி பூண்டுள்ளதாக அக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய கூறியுள்ளார்.

கொழும்பு கிருலப்பனை அவெனியூ வில் தனது அலுவலகத்தை நேற்று திறந்து வைத்தபின் செய்தியாளர்களிடம் பேசுகையி லேயே அவர் இவ்வாறு கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ மற்றும் ஏனையோரை நான் ஒன்றிணைப் பேன். இது எனது கடமை என கரு ஜயசூரிய கூறினார். அரசாங்கத்தை எதிர்கொள்வதற்கு கட்சியின் (19ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.வரும் கலாம்...

## த.தே.கூட்டமைப்புக்கு மு.காங்கிரஸ் அழைப்பு

(கொழும்பு)

13வது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று அதிகாரப்பகிர்வை வழங்க, இலங்கை இந்தியாவிடம் உறுதியளித்ததாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அரசாங்கம் 13வது திருத் தச் சட்டத்திற்கு அப்பால் சென்று தீர்வை வழங்க மேற்கொண்ட தீர்மானத்தை வர வேற்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான தகவல்களுடன் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிச் செய லாளர் நிசாம் காரியப்பர் எமது செய்திப் பிரி வுக்கு கருத்து வெளியிட்டார். (எ-5)

## பிரபாகரனை விடவும் கருணா சிறந்த தளபதி

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைக் காட்டிலும் கருணா சிறந்த தளபதி என தெரிவித்திருக்கிறார் இந் திய அமைதிப் படையின் இராணுவப் புல னாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் கேணல் ஹரிகரன்.

பிரபா – கருணா முறுகலைத் தொடர்ந்து அமெரிக்காவின் சென்னை துணைத் தூத ரக அதிகாரிகளுக்கு இக்கருத்தைச் சொல்லி யிருக்கிறார் ஹரிகரன்.

பிரபாகரனைக் காட்டிலும் சிறந்த தளபதி கருணா என்றும் எந்தவொரு மரபுவழிப் போரிலும் கருணா வெற்றிபெறக் கூடியவர். அத்துடன் (20ஆம் பக்கம் பார்க்க)

### டாக்டர் கலாம் உரையாற்றியபோது

## இடையூறு விளைவித்தவர் வெளியேற்றப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

டாக்டர் அப்துல் கலாமின் உரையின் போது அநாகரிகமாக நடந்து கொண்ட நபர் ஒருவர் வெளியேற்றப்பட்டார்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் புகழ்பெற்ற விஞ்ஞானியுமான டாக்டர் அப்துல் கலாம் நேற்று யாழ்ப்பாணத் திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இந்த விஜயத்தின்போது யாழ். இந்துக் கல்லூரிக்கும் அவர் சென்றிருந்தார். அங்கு குமாரசுவாமி மண்டபத்தில் டாக்டர் அப்துல் கலாம் சிறப்புரையொன்றையும் ஆற்றினார்.

இந்த உரையின்போதே குறித்த நபர் இடையூறு ஏற்படுத்தினார். இதனால் அந்த நபர் உடனடியாக மண்டபத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்.

இதுதவிர டாக்டர் அப்துல் கலாமின் உரையின்போது இடையூறு ஏற்படுத்திய நபர் மண்டபத்திற்கு விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு மங்கல விளக்கேற் றும்போது (20ஆம் பக்கம் பார்க்க)

## இல்லாத அதிகாரங்களுக்காக ஏங்குவதில் அர்த்தமில்லையாம்

நாட்டில் இல்லாத அதிகாரங்களுக்காக ஏங்கு வதில் அர்த்தமில்லையென ஊவா மாகாண சபை யின் முதல் அமைச்சர் சசிந்திர ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

தற்போது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு நியாயமான அளவு சேவைகளை மக்க ளுக்கு ஆற்றமுடியும் என்பதே எனது நிலைப்பாடு. காணி அதிகாரம் கிடைத்தால் நல்லது. பொலிஸ் அதிகாரம் கிடைத்தால் நல்லது என ஏங்குவதில் அர்த்தமில்லை.

கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்தினால் மாகாணங்களை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்யமுடியுமென சசிந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச விசாரணைக்கு மீண்டும் ஐ.நா. நிபுணர் குழு வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் இடம் பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவில் அங்கம் வகித்த பேராசிரியர் ஸ்டீபன் ராட்னர் மீண்டும் வலி யுறுத்தியுள்ளார்.

அத்துடன், இப்போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணைகளை நடத்துவதன் மூலமே, இலங்கையில் சமாதானத்தையும் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத் தையும் ஏற்படுத்த முடியும் எனவும் ஸ்டீவன் ராட்னர் தெரிவித்துள்ளார். ஜெனிவாவில் கடந்த வாரம் இடம்பெற்ற இராஜதந்திரிகள் வட்ட மேசைக் கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இப்போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணை களின் அவசியம் குறித்து அவர் மீண்டும் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜெனிவாவில் உள்ள இராஜதந்திரிகள் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை, மனித வுரிமைகள் கண்காணிப்பகம் உள்ளிட்ட பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த வட்ட மேசைக் கலந்துரையா டலில் கலந்து கொண்டனர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையை சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதி வலியுறுத்தி வரும் நிலையிலேயே இந்த வட்ட மேசைக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இந்த வட்ட மேசைக் கலந்துரையாடலில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுதல் மற்றும் நல் லிணக்கத்துக்கு இடையிலான தொடர்புகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் அடுத்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட் டத் தொடரில் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# டாக்டர் அப்துல் கலாமின் யாழ் விஜயம்.....




## மீனவர் பிரச்சினை குறித்து டாக்டர் கலாமிடம் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களினால் ஏற்படும் இடையூறுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என யாழ். மாவட்ட மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் புகழ்பெற்ற விஞ்ஞானியுமான டாக்டர் அப்துல் கலாம் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின் போது வடமாகாண ஆளுநரின் வாசஸ்தலத்திற்கும் விஜயம் மேற்கொண்டார்.

அங்கு பாரம்பரியகைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, குடாநாட்டு மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்திய ரோலர் படகுகள் அத்துமீறி எமது கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதனால் தொழில் நடவடிக்கைகள் முற்றாக பாதிப்படைகின்றது.

தடைசெய்யப்பட்ட ரோலர் மீன்பிடியினால் எமது கடல் வளங்கள் அழிக்கப்படுவதோடு கடற்றொழில் உபகரணங்களையும் சேதப்படுத்தி செல்கின்றனர்.

இதனால் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களை இழக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ரோலர் மீன்பிடியைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக கடல் வளத்தைப் பாதுகாக்க முடியும் என தெரிவித்த கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் தமது கோரிக்கைகள் உள்ளடங்கிய மகஜர் ஒன்றையும் அப்துல் கலாமிடம் கையளித்தனர். இந்தச் சந்திப்பின் போது இந்தியத் தூதவர் அசோக் கே.காந்தா, சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண எனப் பலர் பங்கு கொண்டிருந்தனர். (எ-6)

## தூக்கில் தொங்கிய நிலையில் ஆணின் சடலம் மீட்பு

(சுழிபுரம்)

யாழ். சுழிபுரம் கிழக்கு மாணிக்கம் வைரவர் கோவில் காச வீதியில் பனை மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று அதிகாலை ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 35 வயது மதிக்கத்தக்க இவர் வாய்பேசாதவர் எனவும் குறித்த நபர் கொலை செய்யப்பட்டு தூக்கில் தொங்கவிடப்பட்டிருக்கலாம் என்றும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

'இலங்கையின் பொதுப்பறவைகள்' புத்தக வெளியீட்டு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் சிறுவர் மகிழ்வகம் இயக்குநர் ரி.ரி.மயூரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் சமூகவியல் பேராசிரியருமாகிய என்.சண்முகலிங்கனும் கௌரவ விருந்தினராக வடமாகாண சிறுவர் நன்னடத்தை சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் தி.விஸ்பரூபனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ராதாகிருஸ்ணன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர். (எ-11)

வர்த்தகப் பெருமக்களே
வியாபாரத்தை பதிவு செய்தல்
BUSINESS REGISTRATION
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
VTL Management Services (Pvt) Ltd
No. 01, Deanston House,
Deanston Place, Colombo 03.
T.P. 072-9994777/011-7902938/
011-4343339

தேவை
பகல் நேரக் காவலாளிகள், சிற்றூழியர்கள்
ஆண், பெண் (தற்காலிகம்) கிளிநொச்சி,
யாழ்ப்பாணத்திற்கு தேவை
திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக் கல்லூரி மைதானம் அருகில்)
(7356)

'பிரயோக ஆங்கிலம்' : ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY : 077 3212711
வகுப்பிட அனுசரணை : புதிய உயர்கல்லூரி : யாழ்நகர்
(7239)

O/Level இன் பின்னர்
Spoken English
அரச , தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவரா ?
ஆங்கிலம் பேசும் திறனில் ஆரம்பநிலையில் உள்ளவரா ?
சாதாரண, உயர்தர கல்வியை தமிழ் மொழியில் பயின்றவரா ?
வெளிநாட்டு உயர்கல்வி , வேலைவாய்ப்பிற்காக காத்திருப்பவரா ?
உள்நாட்டு வேலைவாய்ப்பு , பதவி உயர்வை எதிர்பார்த்திருப்பவரா ?
ஆங்கிலம் ஓரளவு தெரிந்திருந்தும் பேசுவதற்கு தயங்குபவரா ?
ஆமெனில்...
இங்லிஷ்ல பேசலாம் ஈஸியா
Speak Easyல் இன்றே இணையுங்கள்
புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்
Join
Speak Easy ®
centre for better english
CSC - ASIAN COMPUTERS
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி T.P : 021-2262399
230, கண்டி வீதி, சாவகச்சேரி T.P : 021-2270267

## இன்று ஒரு தகவல்

# இளம் பருவம்

"என்ன சேர்... உங்கள் பையன் என்ன செய்து கொண்டிருக்கிறான் இப்போது?" என்று ஒருவர் கேட்டார்.

"அடிக்கடி கண்ணாடி முன்னால் நின்று கொண்டு அழகு சுந்தரன் போல தனது அழகை இரசித்துக் கொண்டிருக்கிறான்!" என்றார் அப்பா.

''இளம் பருவம்... இப்படித்தான் இருக்கும்... அதையெல்லாம் சாதாரணமாக நினைத்து விடாதீர்கள்" என்று அவர் சொன்னார்.

"என்ன சேர் சொல்கிறீர்கள்? கண்ணாடி முன்னால் நின்று கொண்டு நேரத்தை வீணாகச் செலவு செய்கிறானா... அதை ஒரு பெரிய விடயமாக நான் நினைக்க வேண்டுமா?" என்றார் அவர்.

இளம் பருவத்திலே இளைஞர்களும் யுவதிகளும் அடிக்கடி கண்ணாடியிலே அழகைப் பார்த்துக் கொள்வார்கள். அது வெறும் அழகு பார்ப்பது மட்டுமல்ல. அவர்கள் தங்களையே தேடிக் கண்டு பிடிக்கிற ஒரு முயற்சி அது. ஒரு மனோதத்துவ விளைவு.

இதுவரைக்கும் சிறிய பிள்ளையாக இருந்து விட்டோம். இனிமேல் நாங்களும் மற்றவர்கள் மாதிரி மனிதர்கள்தான். அப்படி என்ற உணர்வு அவர்களுக்கு வரும்.

தங்களின் முகம், உடம்பு, நிறம், முடி எப்படி இருக்கிறது என்பதையெல்லாம் கண்டுபிடிக்கிறார்கள். அதன்பின்னர் ஆணோ பெண்ணோ தன்னை கவனிக்க வேண்டும் என்று நினைத்துக் கொள்கிறார்கள்.

இவையெல்லாம் இயற்கை. இதைப் பார்த்துவிட்டு பெற்றோர் பிள்ளைகளை கெட்டுப்போய் விட்டார்கள் என்று நினைக்கக்கூடாது. அவர்களைத் திட்டி தீர்த்துக் கட்டக்கூடாது. இன்றைய உலகிலே பல குடும்பங்களிலே இதுதான் நடக்கிறது.

மனிதனுடைய வாழ்க்கையிலே... இப்படியும் இல்லாமல் அப்படியும் இல்லாமல் ஒரு பருவம் இளம்பருவம். 13 வயது தொடக்கம் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள், பெண்கள் இந்த வகையைச் சேர்ந்தவர்கள் Teen Age group. இவர்களை சிறிய வயதானவர்கள் என்று நினைத்து விடமுடியாது. பெரியவர்கள் என்றும் நினைத்துவிட முடியாது.

இவர்கள் மிகவும் "சென்ஸிட்டிவ்". சமூகம் நினைத்தால் இவர்களை நல்லவர்களாகவும் ஆக்கலாம். கெட்டவர்களாகவும் மாற்ற முடியும்.

சிறிது அக்கறை காட்டினால்,பெரிய மேதைகளாகவும் விஞ்ஞானிகளாகவும் உருவாக்கலாம்.

ஆனால், இந்தக் காலத்தில் என்ன நிகழ்கிறது தெரியுமா? அநேகமாக இவர்களை யாருமே சரியாகப் புரிந்து கொள்வதில்லை. இவர்களை நல்வழிப்பாதையிலே நடத்துவதுமில்லை.

''இதுவரை காலமும் எங்கள் சொற்படி நடந்து கொண்டான். இப்போது அவன் இஷ்டத்திற்கு நடக்க ஆரம்பித்து விட்டான் என்று நினைத்து வருத்தப்படுகிற பெற்றோர் இருக்கிறார்கள். இதெல்லாம் வருத்தப்படும் விடயமல்ல. சந்தோஷப்படும் விடயம் சேர்.

உங்கள் பிள்ளை சொந்தமாக யோசிக்க ஆரம்பிக்கிறதும் நடக்க ஆரம்பிக்கிறதும் ஒரு பிழையான விடயமா? அவன் கடைசி வரைக்கும் உங்களின் பேச்சை மட்டும் கேட்டுக்கொண்டிருப்பான் என்பது என்ன நியாயம்?

பெற்றோர் தமது பிள்ளைகளை மதிக்காதபடியால்தான் வீணாகப் போகும் பிள்ளைகள் இன்றைக்கு அதிகம்.

பெற்றோருக்கு என்னதான் புத்திமதி கூற வருகிறீர்கள்? என்று கேட்கிறீர்களா.

அது தொடர்பாக சில நிபுணர்கள் சொல்லியிருக்கிறதை உங்களின் காதிலேயும் கேட்டு வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அவ்வளவுதான்.

பிள்ளைகளிடம் அன்பு செலுத்துங்கள். குழந்தைகளாக இருந்த உங்கள் பிள்ளைகளுடன் எவ்வளவு பாசமாக இருந்தீர்கள். பெற்றோரின் அன்பான வார்த்தைகளுக்கு ஏங்குகின்றவர்கள் தான் இன்றைய இளைஞர்கள், யுவதிகள்.

அவர்கள் எதைச் சொன்னாலும் அதை அக்கறையோடு காதினில் எடுத்துக் கொள்ளுங்கள். அலட்சியப்படுத்தாதீர்கள். அவர்கள் விரும்புவது உங்களிடம் இருந்து ஒரு மதிப்பு, மரியாதை, அங்கீகாரம் இவ்வளவுதான்.

அவர்களின் முடிவை அவர்களே எடுப்பதற்கு வழி விடுங்கள். அதற்கு நீங்கள் உதவியாக இருங்கள். அவர்களைப் பற்றி மற்றவர்களுடன் மட்டந்தட்டிப் பேசாதீர்கள். அதிலும் அவர்களின் நண்பர்களுடன் கூடுதலாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

பிள்ளைகளுடன் பொய் பேசாதீர்கள். நீங்கள் பொய் பேசுவதை அவர்கள் கண்டு கொண்டால் உங்களின் மேல் அவர்களுக்கு இருக்கிற மதிப்பு போய்விடும். நம்பிக்கை போய்விடும்.

அவர்களுக்கு முன்னால் நீங்கள் சண்டை போடாதீர்கள். உங்கள் பிள்ளையை எப்போதும் இன்னொரு பிள்ளையோடு ஒப்பிட்டு பேசுவதை நிறுத்திக் கொள்ளுங்கள்.

இப்படியாகச் செய்தால் அவர்கள் உங்களிடம் பிரியமாக இருக்க மாட்டார்கள்.

பிள்ளைகளின் பின்னால் சென்று துப்பறியும் வேலையை செய்யாதீர்கள்.

பிள்ளைகளை ''பெட்டியிலே வைத்து மூடி பாதுகாக்க வேண்டுமென்று நினைக்காதீர்கள். அவர்களை எப்படி பாதுகாப்பதென்பது அவர்களுக்குத் தெரியும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடக்கு முதலீடு மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதுடன் ஏற்றுமதிக்கும் தயாராக வேண்டும்

## மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகம் தெரிவிப்பு

நாட்டில் வாழ்க்கைச் செலவு கூடிய மாவட்டமாக யாழ்ப்பாணம் கணிக்கப்பட்டுள்ளதுடன் மொத்தத் தேசிய உற்பத்திக்கான மாகாண ரீதியான பங்களிப்புக் கணிப்பில் வடமாகாணம் கடைசி நிலையில் இருந்து வருகிறது.

இவை அனைத்துமே வடமாகாணத்திலே உற்பத்திப் பெருக்கத்திற்கான தேவையின் முக்கியத்துவத்தினையும் பல்துறை முதலீடுகளுக்கு அவசியமான காலம் உருவாகியுள்ளமையினையும் கட்டியம் கூறுகின்றன என மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும் தெரிவிக்கையில், இந்நிலையில் முதலீட்டினையும் உற்பத்தியினையும் தூண்டும் முகமாக பல்கலைக்கழக வளவாளர்களும் தொழில் நிபுணர்களும் உள்ளூர் வளங்களையும் சாத்தியப்பாடுடைய முதலீட்டு வாய்ப்புக்களையும் இனங்கண்டு முதலீட்டாளர்களுக்கு வழங்க முன்வர வேண்டும். அதே வேளை, உள்ளூர் முதலீட்டாளர்களும் தெரிவு செய்யப்பட்ட தமது முதலீடுகளுக்கான நிபுணத்துவ உதவிகளை இவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

முதலீட்டாளர்கள், வணிகர்கள், வங்கிகள், தொடர்புடைய அரச நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகம் ஆகியவற்றை இணைத்து வடமாகாணத்தில் முதலீட்டையும் உற்பத்தியையும் அதிகரிக்கும் நடவடிக்கைகளை இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகம் மேற்கொண்டு வருகிறது.

உற்பத்தியின் அடுத்த கட்டமாக ஏற்றுமதி தொடர்பிலும் சிந்தித்து விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. கடலுணவுகள் சில உள்ளூர் விவசாய உற்பத்திப் பொருட்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் ஆகியன வடமாகாணத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படக் கூடியவையாகவுள்ளன.

எனவே, முதலீடு அதன் விளைவான உற்பத்தி மற்றும் அதன் தொடர்ச்சியான ஏற்றுமதி ஆகியவற்றில் வடமாகாண மக்கள் அதீத கரிசனை கொள்ள வேண்டும் என்பதுடன் இதனுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளது. (அ-7)

# பொருட்களை உரிமை கோர நீதிமன்றம் பணிப்புரை

உரிமை கோரப்படாத பொருட்கள் கோப்பாய் பொலிஸாரால் AR/47/12, AR.54/12, AR.53/12, AR.52/12, AR.51/12 என்னும் வழக்கிலக்கத்தில் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய சைக்கிள், 03 ஸ்ரீ 5425 இலக்க கார், NPVO 7995 இலக்க மோட்டார் சைக்கிள், கையடக்கத் தொலைபேசி, NPJC 9938 இலக்க மோட்டார் சைக்கிள் மற்றும் பதிவிலக்கம் அற்ற மோட்டார் சைக்கிள் என்பனவே பாரப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு பெற்றுக் கொள்ள தவறும் பட்சத்தில் அவை அரசுடைமையாக்கப்படும் என நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (அ-7)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 70 | 90 |
| உருளைக்கிழங்கு | 65 | 60-100 | 70 |
| பச்சைமிளகாய் | 80-90 | 120 | 130 |
| தக்காளி | 60 | 70 | 70 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 30 | 30 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 80 | 100 | 80 |
| பூசணி | 35 | 40 | 40 |
| புடோல் | 45 | 90 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 45 | 50 | 65 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 60 |
| பாகற்காய் | 100 | 70 | 130 |
| வெண்டிக்காய் | 60 | 140 | 70 |
| கருணைக் கிழங்கு | 70 | 90 | 70 |
| பயற்றங்காய் | 150 | 110 | 140 |
| லீக்ஸ் | -- | 90 | 80 |
| பீற்றூட் | -- | 110 | 100 |
| கறிமிளகாய் | 160 | 160 | 150 |
| முருங்கைக்காய் | 350 | 350 | -- |
| போஞ்சி | 65 | 60 | 80 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 50-60 | 70 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 25 | 25 |

## இராசி பலன்

24.01.2012
(தை 10,செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு
பிரதமை பிற்பகல் 1.20 மணிவரை
திருவோணம் பிற்பகல் 4.29 மணிவரை
இராகுகாலம் 3.36-5.06 மணிவரை
சுபநேரம் 11.06-12.36 மணிவரை

**மேடம்** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம்,வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள்,தூர தேசச் செய்திகளால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**இடபம்** அரைகுறையாக நின்ற பணிகளை செய்து முடிப்பீர்கள்,பக்கத்தில் இருப்பவர்களால் ஏற்பட்ட பகை மாறும்,பயணங்களால் பலனுண்டு, நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**மிதுனம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், அரசு சம்பந்தப்பட்ட வகையில் சலுகைகளில் தாமதம் ஏற்படலாம், சேமிப்பு செலவாகாதிருக்க விழிப்புணர்ச்சி தேவை.

**கடகம்** நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**சிங்கம்** பகைவர்கள் விலகுவர், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தொழில் போட்டிகள் மாறும்,போசன சுகமுண்டு, பெண்களால் பெருமை சேரும் நாள்,சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கன்னி** புத்திரர்களின் தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், தள்ளிப் போட்ட காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள்,உயர் அதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும்.

**துலாம்** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்,தொழில் முன்னேற்றமுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும், வாகன யோகமுண்டு.

**விருச்சிகம்** வளர்ச்சி கூடும் நாள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், புதிய தகவல்கள் வந்து சேரும் நாள், சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.


**தனுசு** செய்தொழிலில் மேன்மையுண்டு, உயர்வும் கிடைக்கும்,கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்,குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும்.

**மகரம்** தொட்ட காரியம் வெற்றி பெற கடவுளை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக இருந்த விடயமொன்று முடிவில் நல்லதாக அமையலாம்.

**கும்பம்** மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், உறவினர்களின் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், சயன சுகக்குறைவான நாள்.

**மீனம்** செய்தொழிலில் உயர்வு ஏற்படலாம், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள்,எடுத்த காரியம் கைகூடும்,உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை அமையும்.

வளவன்



# ஒவ்வொரு இளைஞர்களின் வாழ்விலும் இலட்சியம் வேண்டும்

## யாழ்.பல்கலையில் டாக்டர் அப்துல் கலாம் உரை

(யாழ்ப்பாணம்)

உறக்கத்தில் வருவதல்ல கனவு. உறங்கவிடாமல் செய்வதுதான் கனவு. எனவே கனவு காண்பது ஒவ்வொரு இளைஞர்களினதும் வாழ்வில் முக்கிய விடயமாகும்.

ஒவ்வொரு இளைஞர்களுக்கும் வாழ்வில் இலட்சியம் வேண்டும் என டாக்டர் அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்திற்கு நேற்று விஜயம் செய்த கலாம், அங்கு உரையாற்றிய போதே இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

அன்பு மாணவச் செல்வங்களே, பெருமைமிக்க ஆசிரியர்களே, உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்கள். சிறப்புமிக்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்களாகிய உங்கள் அனைவரையும் சந்தித்து உரையாடுவதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி.

விவசாயம், அறிவியல், கலை, வியாபாரம், மேலாண்மை, மருத்துவம், வர்த்தகம், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பல்வேறு இளநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியும் ஆராய்ச்சியிலும் சிறந்துவிளங்கும் உங்களை எல்லாம் சந்தித்து உரையாடுவதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. உங்கள் அனை வருக்கும் என் வாழ்த்துக்கள்.

இன்று (நேற்று) காலையில் யாழ்ப்பாணத்தில் வந்து இறங்கியவுடன் முதல் எண்ணம் எனக்குத் தோன்றியது. என்னவென்றால், நான் 5 ஆம் வகுப்பு படிக்கும்போது, இராமேஸ்வரத்தில் எனக்கு ஒரு அருமையான கணித ஆசிரியரிடம் கிடைத்த அனுபவத்தைப் பற்றி இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவர் பெயர் கனகசுந்தரம். அவர் யாழ்ப்பாணத்தில் பிறந்து, படித்து, வளர்ந்தவர். அவரை இராமேஸ்வரத்தில் நான் சந்தித்தபொழுது, அவர் ஓய்வுபெற்ற கணித ஆசிரியராக இருந்தார். அதுமட்டுமல்ல, அவர் ஒரு துறவியாகவும் இருந்தார். அதுமட்டுமல்ல, எல்லோராலும் போற்றப்பட்டவர் அவர். அதாவது தினமும் அதிகாலை 5 மணிக்கு நூற்றுக்கணக்கான மாணவர்கள் மத்தியில் 5 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இலவசமாக கணிதம் பயிற்றுவிப்பார். கணிதம் பயிற்றுவிப்பதை அவர் ஒரு தொண்டாக கருதினார். அவரிடம் கணிதம் பயின்றால் மாணவர்கள் கணிதத்தில் நல்ல தேர்ச்சியடைவார்கள்.

அப்படிப்பட்ட கணிதத் துறவியிடம் எனக்கு கணிதம் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. நான் அவரிடம் கணிதம் மட்டும் பயிலவில்லை. அவருடைய அற்புதமான வாழ்க்கை நெறியையும், காலை 5 மணிக்கு எழுந்து பணி செய்தால் அந்தக் கல்வி நம் மனதில் நீடித்து நிலைக்கும் என்ற நல்ல வழிமுறையையும் கற்றுக்கொண்டேன். யாழ்ப்பாணம் என்னுடைய ஆசிரியர் பிறந்த இடமாக இருப்பதால், அந்த யாழ்ப்பாணத்தை வணங்குகின்றேன். யாழ்ப்பாணத்தில் இருக்கும் மக்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

என்னுடைய கருத்து என்னவென்றால், உன் உள்ளத்தில் இலட்சிய ஒளி பிரகாசிக்கட்டும். இலட்சியத்தை அடைய அறிவாற்றலைப் பெருக்கு. அதை அடைய உழைப்பு முக்கியம். உழை, உழைத்துக் கொண்டேயிரு. இதனுடன் விடாமுயற்சி உனக்கிருந்தால் நீ யாராக இருந்தாலும் வெற்றி உன்னை வந்துசேரும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருக்கும் இளைஞர்கள் அனைவரும் இலங்கையை ஒரு வளர்ந்த நாடாக மாற்றுவதற்கு நீங்கள் தேர்ந்தெடுத்து பணியாற்றும் துறையில் சிறப்பாகப் பணியாற்றி சிறந்து விளங்குவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. நண்பர்களே, நான் எந்த நாட்டிற்குச் சென்றாலும் அந்த நாட்டின் இளைஞர்களிடம் இந்த நம்பிக்கையை, இலட்சியத்தை, கனவைப் பார்க்கின்றேன்.

அப்படிப்பட்ட இலட்சியம், கனவு உங்கள் கண்களில் பிரகாசிப்பதைப் பார்க்கின்றேன். உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

### நீ தனித்துவமானவன்

தினமும் வீட்டில் எரியும் மின்சார பல்ப்பை பார்த்தவுடன் நம் நினைவுக்கு வருகிறார் தோமஸ் அல்வா எடிசன். தினமும் ஆகாயத்தில் சத்தத்தை எழுப்பி விண்ணில் பாயும் ஆகாய விமானங்களைப் பார்த்தவுடன் நம் மனதில் வருகிறார்கள் ரைட் சகோதரர்கள். நாம் உபயோகிக்கும் தொலைபேசி மற்றும் கைப்பேசியைப் பார்க்கும்போது அலெக்ஸாண்டர் கிரகம்பெல் நம் மனதின் அருகாமையில் தோன்றுகிறார். சூரியன் பிரகாசித்துக்கொண்டிருக்கும் போது ஏன் கடலின் நிறமும் அடிவானமும் நீல நிறத்தில் தோன்றுகின்றது என்ற கேள்வி எல்லோருக்கும் வரவில்லை. ஆனால் லண்டனில் இருந்து கொல்கத்தாவுக்கு பயணம் செய்யும்போது ஒரு விஞ்ஞானிக்கு அந்த கேள்வி வந்தது. அந்த கேள்விற்கான பதில்தான் ஒளிச் சிதறல். அதுதான் சர்.சி.வி.ராமனுக்கு ராமன் விளைவிற்கான நோபல் பரிசை பெற்று தந்தது.

உலக சமுதாயத்தில் அகிம்சா தர்மத்திற்கு ஆதி கர்த்தாவாக திகழ்ந்தவர் யார் என்ற கேள்வி வரும்போது நாம் எல்லோருக்கும் இந்தியாவில் இருந்தாலும் இலங்கையிலிருந்தாலும் நம் ஞாபகத்திற்கு வருவது பல்லாயிரக் கணக்கான வீரர்களை, மக்களை கொன்று குவித்து இரத்த சகதியில் வீழ்த்தி கலிங்க போரில் வெற்றியடைந்த அசோகரது மனமாற்றமாகும்.

அதன் பயனால் விளைந்தது தான் அகிம்சா தர்மமாகும்

இப்படிபட்ட வரலாற்றின் பக்கங்களை தனது பக்கங்களாக மாற்றிய ஒவ்வொருவரும் ஒரு வகையில் தனித்தன்மை பெற்றவர்கள்தான். இந்த உலகத்தில் பிறந்த அனைவருக்கும் வரலாற்றின் பக்கங்களில் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த பக்கத்தை இந்த உலகமே படிக்க வைப்பது இளைஞர்களாகிய உங்கள் ஒவ்வொருவரதும் கைகளில் சிந்தனைக்களில் செயல்களில் தான் உள்ளது.

நீங்கள் அனைவரும் தனித்துவமானவர்களே. ஆனால் இந்த உலகம் இரவும் பகலும் கடுமையாக உழைத்துக் கொண்டு இருக்கிறது. ஏனென்று தெரியுமா உங்களையும் மற்றவர்களைப் போல் ஆக்குவதற்காக. அந்த மாயவலையில் நான் விழ மாட்டேன்; நான் தனித்துவமானவன் என்பதை நிரூபிப்பேன் என்று நீங்கள் நினைத்த அடுத்த வினாடி வரலாற்றில் உங்கள் பக்கம் எழுதப்பட நீங்கள் விதை விதைத்து விட்டீர்கள் என்று அர்த்தம்.

மன எழுச்சியடைந்துள்ள இளைஞர்கள் ஒரு நாட்டின் மிகப்பெரிய சொத்து. நாட்டின் சவால்களை சமாளிக்க நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட நமது இளைய தலைமுறை எழுச்சியுற வேண்டும்.

கல்வி நிறுவனங்கள் மாணவ மாணவியரின் ஆராயும் மற்றும் சிந்திக்கும் திறனை வளர்க்க வேண்டும். அவ்வாறு வளர்த்தால் அது மாணவர்களின் படைப்பு திறனையும் ஆக்கபூர்வமான உற்பத்தி திறனையும் வளர்க்கும். இந்த திறமைபெற்ற மாணவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் தன்னிச்சையாகவே கற்கும் திறனை அடைவர்.

### புயலைத் தாண்டினால் தென்றல்

அன்புள்ள மாணவர்களே, திருக்குறள் என் வாழ்வில் இணைந்த மிக முக்கிய வாழ்க்கைச் சித்தார்ந்தம். என் மாணவப் பருவத்தில் நான் அறிந்த திருக்குறள், என்னுடைய வாழ்வில் முக்கிய அங்கமாகி என் மனதில் இலட்சியப் பொறிகளை உருவாக்கியது. 1946 இல் ஸ்வாட்ஸ் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது என்னுடைய தமிழ் ஆசிரியர் திருமலைக்கண்ணன், வினைத்திட்பம் 67 ஆவது அதிகாரத்தில் இருந்து 666 ஆவது திருக்குறளைப் பாடிப்பாடி பரவசப்படுத்தினார். அன்று மனதில் பதிந்த குறள், என் வாழ்வில் இலட்சியங்களை கொண்டு வரும் விண்கலம் போன்ற தோர் சக்தி மிக்க குறளானது.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப
எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

இக்குறள்தான் என் வாழ்வின் அஸ்திபாரமானது. எனது விஞ்ஞானப் பணியில் ஒவ்வொரு கால கட்டத்திலும் சோதனைகள் சோர்வுறச் செய்தபோது, உள்ளத்துக்கு உரமூட்டிய குறள் இது. இந்தியாவில் பல விஞ்ஞானிகளின் எண்ணங்கள் பல வடிவங்களில் உருவெடுத்து அக்னி எழுச்சி பெற்று ஏவுகணைச் சக்தியாக மலர்ந்தது. இந்தியா பல துறைகளில் தன்னிறைவு பெற்றுத் திகழ்கின்றது. செயலில் உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம்.

உங்களைப் பார்க்கும் போதெல்லாம் எப்போதும் சிரித்துக் கொண்டே இருக்கிறீர்களே... வாழ்க்கை எப்போதும் இனிப்பாக இரு க்க முடியுமா? என்று ஒரு மாணவர் கேட்டார்.

நான் அவருக்கு பதில் சொன்னேன்,

ஒவ்வொருவரின் வாழ்விலும் பல புயல்களையும் சில தென்றல்களையுமே எதிர்கொள்ள நேர்கின்றது. ஒரு தென்றலின் சுகத்தை நோக்கிச் செல்லும்போது பல புயல்களைக் கடக்க வேண்டி யிருக்கிறது. தோல்வியில்லாமல் வெற்றியில்லை.

கண்ணீர் எப்போதும் கரிப்பாகவே இருக்கும். ஆனாலும் ஓரிரு சமயங்களில் அது இன்பமாகவும் இருக்கும். அந்த இன்பம் பெற வேண்டுமானால் பல புயல்களைக் கடக்கும் உள்ள உறுதியைப் பெற வேண்டும். நம் எண்ணங்கள் உறுதியானால் அவை உழைப்பாக மாறி நாம் எண்ணிய இலட்சியத்தை அடையலாம். இக்கருத்தை பலவிதங்களில் தெளிவு உரைகளில் மறைநூல் திருக்குறள் உணர்த்துவதை காணலாம்.

1947இல் இந்தியாவில் ஒரு இடத்தில் சாதிக் கலவரமோ, மதக்கலவரமோ ஏற்பட்டால் அது நாடு முழுமைக்கும் பரவும் தன்மை படைத்ததாக இருந்தது.

ஆனால் 2012இல் அப்படி இல்லை.

இந்திய சமுதாயம் அறிவார்ந்த மாற்றத்தை அடைந்ததன் காரணமாக சமுதாயம் மறுமலர்ச்சி பெற்றதன் காரணமாக அப்படிப்பட்ட வன்முறைகள் கலவரங்கள் மறைந்து வருகின்றது.

அறிவுப்புரட்சி ஒன்றுதான் சமுதாய மறுமலர்ச்சிக்கான அடிப்படையாகும்.

சாதி, மதம், மொழி மற்றும் இன வேற்றுமைகளில் இருந்து விடுபட்டு மனித இனம் மேம்பாடடைந்த அறிவார்ந்த மனித இனம் என்ற நிலைக்கு மனித சமுதாயத்தை எடுத்துச் சென்றால் தான் ஒரு சமதர்ம சமுதாயத்தை, மேடுபள்ளம் இல்லாத சமு தாயத்தை, வளர்ந்த சமுதாயத்தை , அமைதியான சமுதாயத்தை அமைக்க முடியும்.

அப்படிப்பட்ட சமுதாயம் அமைய வேண்டுமானால், அடிப்படைத் தேவை என்ன? நம் வாழ்வில் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சியம் இருக்க வேண்டும்.

### வள்ளுவர் காட்டும் வளமான நாடு

ஒரு நாடு நல்ல வளமான நாடாக கருதப்பட வேண்டுமானால் அந்த நாட்டில் நோயின்மை, செல்வச் செழிப்பு, நல்ல விளைச்சல், அமைதியும் சுமுகமான சமுதாயச் சூழ்நிலையும், வலிமையான பாதுகாப்பும் அந் நாட்டில் நிலவ வேண்டும் என்கிறார். என்ன அருமையாக ஒரு வளமான நாட்டை படம் பிடித்துக் காட்டுகின்றார். நாம் எல்லோரும் அறிவார்ந்த முறையில் உழைத்துத்தான் நமது நாட்டை வளமான நாடாக மாற்ற வேண்டும்.

### அமைதியை தேடி

சுமுகமான மேடு பள்ளம் இல்லாத ஒரு அறிவார்ந்த அமைதியான மகிழ்ச்சியான சமுதாயத்தை உருவாக்க என்ன செய்ய வேண்டும் என்ற தேடலின் ஒரு பகுதியாக தேடிக்கொண்டு இருக்கின்றேன். நான் ஒரு முறை 2003 ஆம் ஆண்டு இந்தியாவின் வட கிழக்கு மாநிலமான அருணாச்சலப் பிரதேசத்திற்கு 3500 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள தவாங் என்ற இடத்திற்கு சென்றேன். ஒரு நாள் முழுதும் இருந்து அங்கு புத்த பிக்குகளை சந்தித்தேன். கடுமையான குளிரில் வாழ்வதற்கு மிகவும் சிரமப்படக்கூடிய சூழல் இருக்கும் போது அங்கு உள்ள மக்கள் அனைவரும் சிரித்த முகத்துடன் புன்னகை தவழ வீற்றிருப்பது கண்டேன். இப்படிபட்ட சூழ்நிலையில் இங்கு எப்படி அமைதியும் சாந்தியும் நிலவுகிறது என்ற கேள்வி என்னுள் எழுந்தது.

அங்கிருக்கும் தலைமை புத்த பிக்குவிடம் கேட்டேன்? இது எப்படி சாத்தியமாகும் என்று? அதற்கு அவர் நீங்கள் நாட்டின் குடியரசுத் தலைவர் உங்களுக்கு தெரியாதா? என்றார். நான் விடவில்லை, இல்லை நீங்கள் எனக்கு பதில் சொல்லவேண்டும் என்று வலி

(தொடர்ச்சி 19ஆம் பக்கம் பார்க்க)

# இசட் புள்ளி உட்பட அனைத்து கல்வி நடைமுறையிலும் மாற்றம்

## கல்வித்துறையில் மறுமலர்ச்சி ஏற்படுத்த இதுவே வழி என்கிறார் பந்துல



(கொழும்பு)

**இலங்கையில் காணப்படும் கல்வி முறையில் மாற்றத்தை கொண்டு வரும் அதேவேளை, தற்போது நடைமுறையில் உள்ள இசட் புள்ளி முறை உட்பட அனைத்து நடைமுறைகளிலும் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான தேவை ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

**சில மாணவர்கள் 3 பாடங்களிலும் (ஏ) திறமைச்சித்தியைப் பெற்றிருந்த போதிலும் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகும் சந்தர்ப்பத்தை இழக்கின்றனர்.**

**எனினும் 2 பாடங்களில் (ஏ) திறமைச் சித்தியை பெற்ற ஒருவர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

லேக்ஹவுஸ் நிறுவனத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பிரதம அதிதியாகக்கலந்துகொண்டுஉரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது குறிப்பிடுகையில், இலங்கையில் இலவசக் கல்வியை சி.டபிள்யு.கன்னங்கரா அறிமுகப் படுத்திய நாள் முதல் இன்று வரை பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமே காணப்படுகின்றன. எனினும் தற்போது நடைமுறையிலுள்ள கல்வி திட்டத்தில் புத்துயிர் அளிக்க வேண்டிய கடப்பாட்டில் நாம் இருக்கின்றோம். இதற்காக சகல பிரிவுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

இதேவேளை, கடந்தாண்டு வெளியான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி கிராமப்புற பாடசாலைகள் கல்விச் செயற்பாடுகளில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றதை காணக்கூடியதாக இருக்கின்றது.

வணிகத்துறையில் நாரம்மல வித்தியாலயம் நாடளாவிய ரீதியில் முதலிடத்தையும் கலைத்துறையில் திஸ்ஸமஹாராம பாடசாலை முதலிடத்தையும் கணிதப்பிரிவில் யாழ்ப்பாண பிரதேசத்தை சேர்ந்த பாடசாலை முதலிடத்தையும் பெற்றுக் கொண்டது.

விஞ்ஞானப் பிரிவில் மாத்திரமே கொழும்பில் உள்ள பாடசாலை முதலிடத்தை பெற்றுக் கொண்டது. முன்னாள் கல்வி அமைச்சர் சி.டபிள்யு.டபிள்யு.கன்னங்கரா அறிமுகப் படுத்திய தொழிற் பயிற்சியுடன் கூடிய கல்வித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

அன்றைய காலத்தில் தரம் 8 ஆம் ஆண்டில் இருந்து மாணவர்களுக்கு தச்சன், மேசன், வெல்டிங் உட்பட பல்வேறு துறைகளில் பயிற்சியுடன் கூடிய பாடத்திட்டம் அமுலில் இருந்தது.

எனவே, மாணவர்களுக்கு பயிற்சியுடன் கூடிய தகவல் தொழில்நுட்பம், கணனி, விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளுடனான பாடசாலைகளை ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்த அரசாங்கம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதற்காக ஒவ்வொரு மாவட்டத்தில் 3 இரண்டாம் நிலை பாடசாலைகளை உருவாக்குவதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், இரண்டாம் நிலை பாடசாலையில் தனியான கணனிக் கூடம், விஞ்ஞான ஆய்வுகூடம், ஆங்கில இலக்கியம், வெளிநாட்டு மொழி, புத்தகசாலை, தகவல் தொழில்நுட்பம், விளையாட்டு மைதானம் உட்பட சகல வசதிகளையும் உள்ளடக்கியதாக அமைக்கப்படும்.

இதன்மூலமே நாட்டில் கல்வித்துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியுமென கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)




# இந்துக்குருமார்கள் ஒன்றிணைந்து இந்துமதத்தை கட்டியெழுப்ப வேண்டும்

## நல்லை ஆதீனமுதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்துக் குருமார்கள் எல்லோரும் ஒன்றிணைந்து இந்து மதத்தை முன்னெடுத்து செல்ல வேண்டும் என நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தினரால் முதன் முறையாக சிவானந்தம் என்னும் ஆன்மீக சஞ்சிகை வெளியீடும் ஒன்றியத்தின் (www.jaffnapriest.org) இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் மண்டபத்தில் யாழ்ப்பாணம் சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்துவெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வரும் இந்துக் குருமார்கள் எல்லோரையும் ஒன்றிணைத்து எமது இந்து மதத்தை முன்னெடுத்து செல்ல வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் ஏனைய மதத்தவர்களை விட இந்து மதத்தவர்களே பெரும்பான்மையாக உள்ளனர். மேலும் இந்துக் குருமார்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிகளை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இவர்களுக்கு ஏற்படும் நெருக்கடி நிலைகளை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை இறைவனிடம் தான் குருமார்கள் முறையிடுவார்கள். அவர்களினால் வேறு எதையும் செய்ய முடியாது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்திகராக வருகை தந்துள்ள யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கடந்த காலங்களில் இந்துக் குருமார்களுக்கு ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகளை நன்கு அறிவார்.

எனவே, இந்துக் குருமார்களுக்கு ஏற்படும் நெருக்கடி நிலைமைகளை தவிர்த்து எமது மதத்தை முன்னெடுத்து செல்ல உதவிபுரிய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சர்வதேச இந்து மத குருபீடாதிபதி அத்வந்தனீய சிவஸ்ரீ ஜம்புமகேஸ்வர சிவாச்சாரியார், யாழ்.பல்கலைக்கழகத்தின் மனிதவள முகாமைத்துவப் பேராசிரியர் கந்தையா தேவராஜா, வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணா எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

## வீதியைப் புனரமைக்க மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கண்டி வீதியில் இருந்து டச்சு வீதியை இணைக்கும் கண்டுவில் வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையால் பயணம் செய்யமுடியாத அவல நிலை உள்ளது.

இவ்வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுவதால் பயணம் செய்வோர் விபத்துக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இவ்வீதியால் தினமும் பல நூற்றுக்கணக்கானோர் பயணம் செய்கின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக்கருத்திற் கொண்டு இவ்வீதியைப்புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)




## முறைசாராக்கல்விப்பிரிவின் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலய முறைசாராக்கல்வி பிரிவினால் இலவச 'தொழிற்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன் என யாழ்.கல்வி வலய உதவிக்கல்வி பணிப்பாளர் எம்.இராஜநாயகம் அறிவித்துள்ளார்.

தொழில்வாய்ப்பினை எதிர்பார்க்கும் ஆண்,பெண் அனைவரும் இப் பயிற்சி நெறியில் இணைந்து தமது எதிர்காலத்தினை வளப்படுத்திக் கொள்ளலாம்.

இதற்கமைய வீட்டு மின்னிணைப்பு, தையல் இயந்திரம் திருத்துதல், புத்தகம் கட்டுதல், மோட்டர் றீவைண்டிங் ஆகிய பயிற்சி நெறிகள் யா/வண்.நாவலர் மகா வித்தியாலயம், யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், யா/வைத்தீஸ்வராக்கல்லூரி, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

பயிற்சியாளர்கள் தாம் விரும்பும் பயிற்சி நெறியினைக் குறிப்பிட்டு சுயவிபரக் கோவையினை தாம் விரும்பும் பாடசாலை அதிபரிடம் கையளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ)

## மகாத்மாகாந்தி நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

காந்தி நினைவு தினம் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அன்றையதினம் காலை யாழ். போதனா வைத்தியசாலை முன்னால் உள்ள காந்தி சிலைக்கு மாலை அணிதலுடன் அதனைத் தொடர்ந்து சங்கத் தலைவர் தி. இராசநாயகம் தலைமையில் அஞ்சலிக்கூட்டம் இல 774, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சங்கப் பணிமனையில் நடைபெறும் என அகில இலங்கை காந்திசேவா சங்கம் அறிவித்துள்ளது. (அ)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பன்னாலை மயிலையம்பதி சாமுண்டிகாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.14 முதல் 8.23 மணி வரை கீரிமலை இரேணுகாச்சிரமத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ உருத்திர புரேஸ்வரர் தலைமையில் நடைபெறவுள்ளது என நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

• இக்கும்பாபிஷேக நிகழ்விற்கான பூர்வாங்க கிரியைகள் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்பு இடம் பெறவுள்ளது. (அ-7)

## உழவு இயந்திர உரிமையாளர் சங்கத்தெரிவு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு உழவு இயந்திர உரிமையாளர் சங்கத்தின் புதிய தெரிவு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு குடத்தனை அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை மண்டபத்தில் நடை பெற்றது.இதன் தலைவராக த. காண்டீபன், செயலாளராக ரஞ்சநாதன், பொருளாளராக தி. ஆனந்தலீலா, உப தலைவராக ப.ஜீவராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் நிர்வாக உறுப்பினர்களாக 7 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக குடத்தனை அமெரிக்க சிலோன் மிஷன் திருச்சபை போதகர் ஜோன் புவியரசன் கலந்து கொண்டு சிறப்பித்தார். அத்துடன் இச்சங்கத்தின் பிரதான ஆலோசகராகவும் இவர் தெரிவு செய்யப்பட்டார். (அ-3-64)





உயரப்புலம் மெதடிஸ்த மிஷன்தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் மரதன் ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றி முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்ற ஆண்களுக்கு பாடசாலை அதிபர் கு. திலீபன் கைலாகு கொடுத்து பாராட்டு வதையும் பெண் வெற்றியாளர்களுடன் பாடசாலை உப அதிபர் திருமதி.சி.நந்தகுமார் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என். குமார்)

## சாவ.ஆதாரவைத்தியசாலையில் நோய் கண்டறிதல் சிகிச்சை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 35 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் இடையில் நோய் கண்டறிதல் மருத்துவ முகாம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இக்கிளினிக் வெள்ளிக்கிழமை தோறும் காலை 10 மணி தொடக்கம் 11 மணி வரை சாவகச்சேரி வைத்தியசாலையின் 26 ஆவது இலக்க அறையில் நடைபெற்று வருகிறது.

எமது உடலில் மறைந்து காணப்படும் பல்வேறு நோய்கள் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு நோய்அறிகுறிகள் காணப்படின் வைத்தியசாலையில் நடைபெறும் கிளினிக்குகளில் சிகிச்சை பெற சிபார்சு செய்யப்படுவர்.

வைத்தியசாலையில் நிலவும் ஆளணிப்பற்றாக்குறை காரணமாக மேற்படி கிளினிக்குகளில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வாரத்தில் 10 பேருக்குமட்டுமே பரிசோதனை நடைபெறும்என்றும் ஆளணிபற்றாக்குறை நீக்கப்பட்டபின் மழுநேர கிளினிக்காக மாற்றப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனையில் ஆரம்பிக்கப்பட்டு தென்னிலங்கை வைத்தியசாலைகளில் நடத்தப்பட்டு வரும் மேற்படி மருத்துவ முகாம் வடமாகாணத்தில் முதல்முறையாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

## இளைஞர் கழகம் அங்குரார்ப்பணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் இளைஞர் கழகம் கல்லூரி மண்டபத்தில் கடந்த வாரம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

கல்லூரி ஆசிரியை வளர்மதி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ரி.விமல் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

நடப்பாண்டுக்கான நிர்வாக தெரிவில் தலைவியாக செல்வி.க. கஜானா, செயலாளராக செல்வி சி.லக்ஷனா, பொருளாளராகசெல்வி. பி.தமயந்தி, அமைப்பாளராக செல்வி தே. தாரணி, விளையாட்டு செல்வி. செ. துவாரகா, கலாசாரம் நா. பிரதீபா, தொழில் முயற்சி செல்வி ச.சாதித்தியா, ஊடகம் க. கேமா, தேசியசேவை செல்வி சி.கானமிர்தா, கல்வி செல்வி செ. கீர்த்தனா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ-3-29)

## அங்குரார்ப்பணக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு, மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் எஸ்.குகணேசன் அறிவித்துள்ளார். (அ)

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்


# கூட்டமைப்பின் நிலைப்பாடே எமது நிலைப்பாடு

## சம்பந்தனுக்கு கிழக்கு முதலமைச்சர் கடிதம்

வடக்கு,கிழக்கு இணைப்புதவிர்ந்த காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் நானும் எனது தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியும் தங்களுடன் ஒருமித்த கருத்துடனேயே உள்ளோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தனுக்கு கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சி.சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு இணைப்பு தவிர்ந்த காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் நானும் எனது தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியும் தங்களுடன் ஒருமித்த கருத்துடனேயே உள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.





கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது தமிழ்மக்களின் அரசியல் ஒற்றுமை பற்றிப் பேச கொழும்பிலுள்ள தங்களின் வாசஸ்தலத்தை நாடி வந்த போது நான் கிழக்கு மாகாணத்தையோ அதன் முதலமைச்சரையோ ஏற்றுக் கொள்ளவில்லை என்று கிழக்குமக்களின் சுயாதீனத்தையும் இறைமையையும் தாங்கள் நிராகரித்தபோதும் கூட தங்களுக்கு எம்மக்களின் சார்பாக இந்த மடலை வரையக் காரணம் ஒட்டுமொத்த தமிழினத்தின் சுபீட்சமான, நிம்மதியான நிகழ்கால, எதிர்கால நலன்களைத்தவிர குறுகிய அரசியல் நோக்கங்கள் அல்ல என்பதைதாங்கள் முதல் கண் உணர்வீர்கள் என நம்புகின்றேன்.

அரசாங்கத்துடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் கடந்த 18 மாதங்களாக 15 சுற்றுக்களாக நடத்தி வரும் பேச்சுவார்த்தையில் பேசப்படும் விடயங்கள் தமிழ்மக்களின் சார்பாக கூட்டமைப்பினரால் முன்வைக்கப்படும் அதிகாரபகிர்விற்கான யோசனைகளை இதுவரை கூட்டமைப்பினரால் தங்க ளுக்கு வாக்களித்த மக்களுக்கோ நாட்டு மக்களுக்கோ பகிரங்கப்படுத்தப்படவில்லை.

எம் இந்த யூகம் உண்மையா இருக்குமானால்வடக்கு,கிழக்குஇணைப்பு தவிர்ந்த காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பிலும் நானும் எனது தலைமையிலான தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் தங்களுடன் ஒருமித்த கருத்துடனேயே உள்ளோம்.

வடக்கு,கிழக்கு இணைப்பின் சாத்தியப்பாடு குறித்தும் அதில் கிழக்கு மாகாண மக்களது அபிலாஷைகள் பற்றியும் தங்களுடன் விரிவாக கலந்துரையாட நாம் தயாராகவுள்ளோம்.

எனவே தாங்கள் அரசாங்கத்துடன் தமிழ் மக்களின் அதிகார பகிர்வுக்காக மாகாணசபை முறைமையையும் 13 ஆவது அரசியல் அதிகாரத்தையும் வலியுறுத்துவீர்களாயின் அது தொடர்பில் கூட்டமைப்புடன் திறந்த மனதுடன் எம்மக்களின் நலனுக்காக பேசுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் என்பதுடன் பேச்சுவார்த்தைக்கான பகிரங்க அழைப்பையும் விடுக்கின்றேன் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-2)

# கிரிக்கெட் அணி வீரர்களுக்கு அரசியல் அழுத்தம் அதிகரிப்பு

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர்களான மஹேல ஜயவர்தன மற்றும் குமார் சங் கக்கார ஆகியோர் மீது அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வரு வதாக ஜே.வி.பி.குற்றம் சுமத் தியுள்ளது.

தேசிய அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு ஆளும் கட்சி அரசியல்வாதிகள் குறித்த இரண்டு வீரர்களின் மீதும் அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

இந்த அழுத்தங்கள் காரணமாக மஹேல மற்றும் சங்கக்கார ஆகியோர் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை என ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மஹேல ஜயவர்த்தனவின் எண்ணக்கருவிற்கு அமைய உருவாக்கப்பட்டு வரும் ஹோப் புற்றுநோய் மருத்துவமனையைக் கருவியாகப் பயன்படுத்தி இந்த வீரர்களின் மீது அரசாங்கம் அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

புதிய தலைவராக சங்கக்கார அல்லது மஹேல பொறுப்பேற்றுக் கொள்வதில் எந்த சிக்கலும் கிடையாது என்றபோதிலும் அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணிந்து அணி தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள கொள்ளக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் அணியின் வீரர்கள் தெரிவில் தலையீடு செய்யும் வரையில் நாட்டின் விளையாட்டுத்துறையில் அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)



யாழ். இளவாலை மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலையின் முதலாம் வகுப்பு மாணவர்களிற்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இவ்விழா நாயகர்களுடன் பிரதம விருந்தினர்கள், அதிபர், ஆசிரியர்களுடன் நிற்பதனை படத்தில் காணலாம்.

# தாய்நாடு மீதான நாட்டுப்பற்றை ஒருபோதும் நாம் மறக்கக்கூடாது

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அறிவு மற்றும் விஞ்ஞானத்தின் ஊடாக முன்னோக்கி செல்லும் தாய் நாடு மீதான அன்பு அற்றும் நாட்டுப்பற்றை ஒருபோதும் மறக்கக் கூடாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் இடம் பெற்ற நிகழ்வொன்றின் போது வலியுறுத்தியுள்ளார்.

தாதியர் பயிற்சி பெற்ற இரண்டாயிரத்து 500 இளைஞர் யுவதிகளை சேவையில் இணைத்துக் கொள்ளும் நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது தாதியர் சேவையில் பயிற்சிகளை பெற்ற குழுவினர்களில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி 30 இளைஞர், யுவதிகளுக்கு ஜனாதிபதியால் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

தாதியர் சேவை தொழில் ரீதியானது என்பதை விடவும் மிகவும் கௌரவமான ஒரு சமூகசேவை எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி நோய்வாய்ப் பட்டவரை குணப்படுத்தும் சக்தியை கொண்ட தாதியர் புன்சிரிப்புடன் பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பதாக தெரிவித்துள்ளனர். (அ-2)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள மு/ கோட்டைகட்டிய குளம் அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப.ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் கோட்டக்கல்வி பணிப்பாளர் ச.செல்வரட்ணம், சிறப்பு விருந்தினராக வணபிதா. ஏ.பி. வின்சென்ற், துணுக்காய் கல்விவலய உடற்கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர் நா.இரவீந்திரன்,தென்னியன் குளம் கிராம அலுவலர் ச.மரிய தாஸ், கோட்டைகட்டிய குளம் கிராம அலுவலர் மா. குலசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-15)

# அநாவசிய தேவைகளுக்காக பணம் செலவழிக்கப்படுகின்றது

## பிரதமர் தெரிவிப்பு

தேவைகளை விட அநாவசிய விடயங்களுக்காக நாட்டு மக்கள் அதிக செலவு செய்வதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

நாட்டில் எவ்வளவு உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டாலும் நாட்டு மக்கள் இறக்குமதிகளின் மீதே அவத்தானம் செலுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதைக் காட்டிலும் தேவையற்ற விடயங்களுக்காகவே அதிகமாக தமது வருமானத்தை செலவிடுகின்றனர்.

இதனால் எவ்வளவு உழைத்தாலும் மக்களுக்கு போதுமானதாக அமைவதில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

# தொண்டராசிரியர்களுக்கு கலந்துரையாடல்

(மல்லாவி)

வன்னி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுடன் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடல் ஒன்றை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தவுள்ளார் என வன்னி மாவட்ட தொண்டராசிரியர் சங்கத் தலைவர் சிவபாதம் நகுலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வன்னி மாவட்டத்தில் உள்ள வடமராட்சி கிழக்கு, துணுக்காய், முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, மடு, கிளிநொச்சி ஆகிய கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டராசிரியர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறும் வருகைதரும் போது சுயவிபரக்கோவையுடன் வருகை தருமாறும் மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் 0773549843, 0777640332 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# குறுகியகால அபிவிருத்திக்காகவாவது கூட்டமைப்பிடம் நாட்டை ஒப்படையுங்கள்

## அரியநேத்திரன் எம்.பி. கோரிக்கை



(கொழும்பு)

**தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிடம் நாட்டைத்தந்து பாருங்கள். மிகக் குறுகிய காலத்தில் நாடு எவ்வாறு முன்னேற்றம் அடையும் என்பதை அறிவீர்கள் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.**

**மட்டக்களப்பு பழுகாமத்தில் இடம்பெற்ற பொங்கல் தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா வருகை தந்த போது அவரிடம் அரசு தற்போது 13(+) பற்றி கூறியுள்ளது.

30 வருட கால யுத்தத்தின் பின்னர் விடுதலைப்புலிகளை அழித்து விட்டதாக அரசாங்கம் கூறிவருகின்ற நிலையில் இதுவரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படவில்லை.

தற்போது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அரசுடன் 18 சுற்றுப்பேச்சுக்கள் நடைபெற்றுள்ள போதிலும் நிலையான தீர்வுகள் எதுவும் கிட்டவில்லை.

இவ்வருடத்தில் தமிழ் மக்களுக்கு வேண்டிய சுய உணர்வு அதிகாரங்கள் அனைத்தும் கிடைக்க வேண்டும் என அனைவராலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நிரந்தர அரசியல் தீர்வுக்காக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஈடுபட்டு வருகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

மேலும் எமது பகுதியில் மிஞ்சியது கல்வி மட்டுமே. இதனை உரிய முறையில் பயன்படுத்தியதனால்தான் நமது சமூகம் இன்று வளர்ந்து வருகின்றது. இதற்கு கல்வி கற்கும் மாணவர்களின் சிந்தனை ஒன்றாக இருக்க வேண்டும்.

கடந்த 2011 இல் வெளியான கல்விப் பொதுத்தர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் பலத்த சர்ச்சைகள் எழுந்தன.

வடகிழக்கிலுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் மாத்திரம் தான் அக்கறை செலுத்துகின்றார்கள். இதன்பின் வரும் பரீட்சைகளில் கவனம் செலுத்துவது மிக குறைவாகவே உள்ளனர்.

இதைவிட வடகிழக்கில் அதிகம் வேலையில்லாப் பட்டதாரிகள் உள்ளனர். எனினும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அதிகம் கலைத்துறைக்குத்தான் திணிக்கின்றார்கள்.

கடந்த 2010 ஆம் ஆண்டு மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு 94 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் 22 பேர் மாத்திரம் தான் நமது மாவட்டத்தினைச் சேர்ந்தவர்கள். இந்த நிலை மாற்றமடையவேண்டும்.

30 வருட கால ஆயுதப்போராட்டம் பல அழிவுகளைத் தந்திருந்தாலும் எமது மக்களின் ஒழுக்கம் விடுபடவில்லை. இது போன்று எமது எதிர்கால சந்ததியினரை ஒழுக்கத்துடன் வளர்க்கவேண்டும்.

இதற்கு இவ்வாறான மன்றங்கள், அமைப்புக்கள் முன்மாதிரியாகச் செய[illegible]ட வேண்டும் என்று குறிப்பிட்டார். (அ-2)

## மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டோர் கைது

(இரத்தினபுரி)

இரத்தினபுரி நிவித்திகல கரவிரட்ட ஆற்றில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையின் சுற்றிவளைப்புப் பிரிவினர் நேற்றுமுன்தினம் மாலை இவர்களை கைது செய்துள்ளனர்.

இந்த சுற்றிவளைப்புக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளது. மாணிக்கக்கல் அகழ்விற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் இதன்போது அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபை மூன்று இலட்சத்து ஆறாயிரம் ரூபா அபராதத்தை அறிவிட்டுள்ளது. (அ-2)



சாவகச்சேரி கச்சாய் வீதி விகோரியார் ஆலய ஒளிவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வினைப் படத்தில் காணலாம்.
(படம்:-சாவகச்சேரி செய்தியாளர்.)

## மனிதஉரிமை பேரவை அமர்வுகளை வெற்றிகரமாக எதிர்நோக்க முடியும்.

### அமைச்சர் மஹிந்த சமரசிங்க நம்பிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை வெற்றிகரமாக எதிர்நோக்கமுடியும் என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் பேரவை அமர்வுகளில் விவாதம் நடத்தப்பட்டால் அதனைச் சவாலாக கருத வேண்டியதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எந்த நிலைமையையும் எதிர்நோக்கத் தயாராக இருக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

எங்களிடம் காணப்படும் தரவுகளை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ளத் தயார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு இறுதி அறிக்கை தொடர்பில் விசேட உரையாற்றப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தக்குற்றச்செயல் வி[illegible]ரணையை வலியுறுத்தும் வகையில் சில நாடுகள் அழுத்தங்களை பிரயோகிக்க முனைப்புக்காட்டலாம் எனவும் அதனை வெற்றிகரமாக முறியடிக்கமுடியும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

## புலிகளால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் பயன்படுத்தப்படும்

### பல்கலை.மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டடங்கள் பயன்படுத்தப்படும் என பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் நிர்மாணிக்கப்பட்ட சில கட்டடங்கள், பல்கலைக்கழக மாணவர்களின் நலனுக்காக பயன்படுத்தப்படவுள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் தங்குவதற்கு இந்த விடுதிகள் பயன்படுத்தப்படவுள்ளன.

கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள சில கட்டடங்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் கலாசார மையமாகப் பயன்படுத்தப்பட்ட கட்டடம் ஒன்றை மாணவர்களின் விடுதியாக பயன்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## இனப்பிரச்சினை தீர்வுத்திட்டம் குறித்து ஜனாதிபதி மஹிந்த தெளிவுபடுத்த வேண்டும்

### திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான அரசாங்கத்தின் தீர்வுத்திட்டம் வெளிப்படுத்தப்பட்ட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கோரியுள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முழுமையாக அமுல்படுத்தப்படும் என ஜனாதிபதி அளித்த வாக்குறுதி இதுவரையில் அமுல்படுத்தப்படவி;ல்லை.

13 ஆம் திருத்தச் சட்டத்தை தாண்டிய தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படும் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்குப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவது தொடர்பில் அரசாங்கம் காலம் தாழ்த்துவதனை பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.


வடக்கு பிரச்சினைக்கு நம்பகரமான தீர்வுத்திட்டமொன்று வழங்கப்பட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாகும்.

எனினும் இந்தத் தீர்வுத்திட்டம் நாட்டின் அரசியல் யாப்பிற்கு அமைவானதாக இருக்க வேண்டும். அனைத்து இன மக்களினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் அமைய வேண்டும்.

அரசாங்கம் சர்வதேசத்தில் ஒரு நிலைப்பாட்டையும் உள்நாட்டில் மற்றோர் நிலைப்பாட்டையும் வெளியிட்டு வருகின்றமை ஆபத்தானது. (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 19



மேற்கொண்டு அராஸ், புலோன் திசையில் தாக்குதலைத் தொடர்ந்து, லாமான்ஷ்கரையருகே வந்து, பெல்ஜியத்தில் பிரிட்டிஸ்-பிரான்சுப் படைகளைச் சுற்றிவளைத்து,“B” படைத் தொகுதியோடு கூட்டாகச் சேர்ந்து இவற்றை ஒழித்துக் காட்டுவது. ஜெனரல் கிளைஸ்டின் டாங்கிப்பிரிவும் (1250 டாங்கிகள்) ஜெனரல் கோட்டின் டாங்கி கோர்பசும் (542 டாங்கிகள்) இதில் முக்கிய பங்காற்றின.

“B”படைத் தொகுதியின் (தளபதி ஜெனரல் போர்க்) 18 வது, 16வது படைகளைக் கொண்டும் 16வது விசேட டாங்கி கோர்பைக் கொண்டும் (3 டாங்கி டிவிசன்கள் உட்பட மொத்தம் 29 டிவிசன்கள்) மேற்குப் போர் முனையின் வலது பகுதியில் துணைத் தாக்குதல் தொடுக்கப் பட்டது. இப்படைத் தொகுதிக்கு விண்ணிலிருந்து 2வது விமானப் படை ஆதரவளித்தது. 18வது படையின் துணையோடு (7வது காலாட் படைடிவிஷன், 1வது டாங்கிப் படை டிவிஷன், 1வது மோ.து.டி) ஹாலந்து நாட்டினுள் நுழைவது, பாராசூட் மற்றும் வான் இறக்குப் படைப் பிரிவுகளைக் கொண்டு ஹேக், ரோட்டர்டாமைக்கைப் பற்றி ஹாலந்து இராணுவத்தின் எதிர்ப்பை செயலற்றதாக்குவது எனும் கட்டளை இப்படைகளுக்கு இடப் பட்டது. ரோட்டார்டாம் பிரதேசத்தினுள் புகுந்து வான் இறக்குப் படைப் பிரிவுகளுடன் இணையு


ஜேர்மன்படை பிரான்சில் யூபெர்ன் நகருக்குள் நுழைகிறது-1940



மாறு 18-வது படையின் முக்கிய சக்திகளுக்குக் கட்டளையிடப் பட்டது.

நாமூர், லியேஸ், அந்வேர்பன் ஆகிய கோட்டைகளைச் சுற்றி வந்து இவற்றிற்கு எதிராக தடைகளை அமைத்து “A” பிரஞ்சுத் துருப்புக்களைக் கட்டிப்போடுவது, இதன் மூலம் நேசநாட்டு முதலாவது படைத்ததொகுதியை சுற்றி வளைக்கும் ஆபத்தை ஏற்படுத்தவது, எனும் கடமை பெல்ஜியத்திற்கு எதிராக நிறுத்தப்பட்ட 6வது படையின் முன் (16வது விஷேட டாங்கி கோர்பஸ் உட்பட17 டிவிஷன்கள்) வைக்கப் பட்டது. எனவே “B” படைத் தொகுதி ஹாலந்தைக் கைப்பற்றி, பெல்ஜியத்தில் நேசநாடுகளின் துருப்புக்களைக் கட்டிப்போட்டபின் “A” படைத்தொகுதியோடு கூட்டாகச் சேர்ந்து இவற்றை ஒழித்துக் கட்டுவதில் பங்கேற்கவேண்டும்.

பிரான்சில் பாரிஸ் மீதாக ஜேர்மனிய போர்விமானங்கள்-1940



## யுத்தத்தின் தொடக்கம். சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஆக்கிரமிப்பிற்கான ஏற்பாடுகள்

மேற்குப் போர்முனையில், இடது பகுதியில் ஜெனரல் லெயேபின் தலைமையின் கீழிருந்த “C” படைத் தொகுதிக்கு மஜினோ எல்லைக் கோட்டருகே பிரஞ்சுத் துருப்புக் களைக் கட்டிப்போடும் கட்டளை இடப்பட்டிருந்தது. இதன் வசம் 1-வது மற்றும் 7-வது படைகள் - மொத்மாக 19 டிவிஷன்கள் இருந்தன. வேர்மஹ்டின் சேம இருப்பில் 42 டிவிஷன்களும் 1 பிரிகேட்டும் இருந்தன.

இவ்வாறாக பிரான்சினுள் புகுவதற்காக ஹிட்லரின் படைத்தலைமை 136 டிவிஷன்கள் (10 டாங்கி டிவிஷன்கள், 7மோட்டார் டிவிஷன்கள் உட்பட),3ஆயிரத்து 824 போர் விமானங்கள், 2ஆயிரத்து 580 டாங்கிகள், 7 ஆயிரத்து 378 பீரங்கிகள் (75மி.மீ அளவும் அதற்குக் கூடுதலாகவும்) ஆகியவற்றைக் குவித்திருந்தது. இவற்றை எதிர்த்து நின்ற நேச நாட்டு இராணுவங்களின் வசம்

**வி.அ.மத்சுலேன்கோ**

147 டிவிஷன்கள் (23 டாங்கி, இயந்திர மற்றும் மோட்டார் டிவிஷன்கள் உட்பட), சுமாராக 3ஆயிரத்து 100 டாங்கிகள், 14ஆயிரத்து 500க்கும் கூடுதலான பீரங்கிகள், சுமாராக 3ஆயிர்து 800 போர் விமானங்கள் முதலியவை இருந்தன. எனவே விகிதப்படி பார்த்தால் குறிப்பாக டாங்கிகளில், நேச நாட்டுத் துருப்புக்கள் மேலான நிலையிலிருந்தன. ஆனால், பிரஞ்சு டாங்கிகளில் பெரும்பாலானவை தனி டாங்கி பட்டாலியன்களாக படைகளுக்கிடையே இருந்ததால், இவற்றை அவ்வளவு பெருமளவில் பரவலாகப் பயன்படுத்த முடியவில்லை. இது நேச நாடுகளின் மேம்பாட்டை நடைமுறையில் ஒன்றுமில்லாததாக ஆக்கியது ஜேர்மன் டாங்கிகளோ அமைப்பு ரீதியாக டாங்கி டிவிஷன்காளக ஒழுங்கமைக் கப்பட்டிருந்ததால், அவற்றை பெருமள வில் பரவலாகப் பயன்படுத்த முடிந்தது.

நாஜிப் படைகளின் விமானத் தாக்குதலுக்குள்ளா[illegible]ன் பகுதி-1940



இந்தச் சமரில் சக்திகளின் சமநிலை பற்றிய பிரச்சினை நவீன பூர்ஷ்வா இலக்கியத்தில் கடுமையான விவாதத்திற்குரிய ஒரு பொருளாக இருக்கின்றது. பல பிரஞ்சு, பிரிட்டிஷ் ஆசிரியர்கள் நேச நாட்டுத் துருப்புக்களின் சக்திகளையும் சாதனங்களையும் பெரிதும் குறைவாக மதிப்பிட்டு, இவை தோற்றத்திற்கு எதிரியின் எண்ணிக்கை ரீதியான மேம்பாடே காரணம் என்று கூறுகின்றனர். வேறுசில ஆராய்ச்சியாளர்கள் இக்கருத்தை மறுக்கின்றனர். உதாரணமாக அந்நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களில் ஒருவரான பிரஞ்சு ஜெனரல் காம்பிஜேஸ் இதைப்பற்றி பின்வருமாறு எழுதுகிறார்.“1940ஆம் ஆண்டு பிரான்சின் தோல்வி ஓர் அசாதாரணமான சம்பவமாகும்.




பொதுவான சக்திகளின் சமன் நிலையைப் பார்த்தால் டாங்கிகள், பீரங்கிகளைப் பொறுத்தமட்டில் பிரஞ்சு-பிரிட்டிஷ் படைகளுக்கு மேம்பாடு இருந்தது என்பது நமக்கு இப்போது தெரியும்; **விமானப் படையில் இவற்றின் பலவீனம் இவ்வளவு விரைவான தோல்வியை முன்கூட்டியே கூறுமளவிற்கு அவ்வளவு அதிகமாக இல்லை.”**

பிரிட்டிஷ்- பிரஞ்சுப் படைத் தலைமை, 1914 இல் நடந்தபடி ஜேர்மனியத் துருப்புக்கள் மத்திய பெல்ஜியத்தின் வழியாக முக்கிய தாக்குதலைத் தொடுக்கும் என்று கருதி 1-வது, 2-வது, 9-வது, பிரஞ்சு மற்றும் 7-வது பிரிட்டிஷ் பயணப் படைகளை உள்ளடக்கிய மிகப்பலம் வாய்ந்த முதலாவது படைத் தொகுதியை (தளபதி ஜெனரல் பியோ ) பிரஞ்சு-பெல்ஜிய எல்லையில் நிறுத்தியிருந்தது. இத் தொகுதியில் 3 இயந்திர டிவிஷன்கள் உட்பட மொத்தமாக 32 பிரஞ்சு டிவிஷன்களும் 9 பிரிட்டிஷ் டிவிஷன்களும் இருந்தன. மஜினோ எல்லைக் கோட்டை ஆதாரமாகக் கொண்டு நிலையான நேச அணியைத் தோற்றுவிக்கும் கடமை இந்தப்படைத் தொகுதியின் முன் வைக்கப்பட்டது. **அர்டேன்னி திசையில் பெரும் காடுகளும் கரடுமுரடான பாதைகளும் மிகுந்திருந்ததால் இதைக் கடந்து யாரும் வரமுடியாது என்று கருதிய பிரஞ்சு இராணுவம் இப்பகுதியில் குறைந்தளவு சக்திகளை மட்டுமே- 2வது மற்றும் 9வது படைகளிலிருந்து 15 டிவிஷன்களை - நிறுத்தியிருந்தது.**

(தொடரும்)

# இனப்பிரச்சினைத்தீர்வுக்கு 3ஆம் தரப்பின் மத்தியஸ்தம் அவசியம்

## அமெரிக்க எம்.பி.க்களிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் இனப்பிரச்சினை தீர்வுக்கு மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் அவசியம் என வலியுறுத்தியுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இறுதி யுத்தத்தின் போதும் இனமுரண்பாடுகள் முளைத்த காலப்பகுதியிலிருந்தும் தமிழ் இன அழிப்பு நடவடிக்கையொன்று இங்கு இடம் பெற்றது. இதற்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுள்ளது.

அமெரிக்க இராஜதந்திரிகளுக்கும் கூட்டமைப்பினருக்கும் இடையில் நேற்று முன்தினம் யாழ். நகரிலுள்ள தனியார் விடுதியொன்றில் இடம்பெற்ற சந்திப்பின் போதே மேற்படி விடயம் தெரிவிக்கப்படுகின்றது. இச்சந்திப்பில் மேலும் குறிப்பிடப்பட்ட விடயங்கள் வருமாறு,

இலங்கையில் தமிழ், சிங்கள இனங்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள இனமுரண்பாடுகளை தீர்ப்பதற்கு காலத்திற்குக் காலம் வந்த அரசாங்கங்கள் பல தீர்வுத் திட்டங்களையும் உடன்படிக்கைகளையும் கைச்சாத்திட்டனர்.

ஆனால் அத்தனையிலும் தமிழர்கள் ஏமாற்றப்பட்டார்கள். அல்லது சர்வதேசத்திற்கு நாம் பயங்கரவாதிகளாக காட்டப்பட்டோம். இந்த நிலையில் இந்த நாட்டில் இனமுரண்பாடுகளை தீர்ப்பதற்கும் நிரந்தரமான இனப்பிரச்சினை தீர்வு ஒன்று எட்டப்படுவதற்கும் மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் இன்றியமையாதது.

இந்த மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை அமெரிக்கா எடுத்துக் கொள்வதை தமிழர்கள் ஆதரிக்கின்றனர்.

இந்தச் சந்திப்பில் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பாக அமெரிக்க இராஜதந்திரிகள் குழு வினவியது.

இதற்குப் பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் கூட்டமைப்பு தெளிவானதும் உண்மையானதுமான அறிக்கையினை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையே எமது தீர்மானம் என்றனர்.

மேலும் போர்க்குற்றச்சாட்டுக்கள் வலுப்பெறும் போது இனப்பிரச்சினை தீர்வு விடயத்தை கூட்டமைப்பும் தமிழர்களும் கைவிடுவார்கள் என இராஜதந்திரிகள் குழு வினவியது.

இதற்கு பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் போர்க்குற்றச்சாட்டுக்களை இனப்பிரச்சினைக்கான வழியாக பயன்படுத்திக் கொள்வதற்கே கூட்டமைப்பு முயற்சிக்கின்றது.

குறிப்பாக போர்க்குற்றச்சாட்டுக்கள் என்பதற்கு மேலாக காலத்திற்கு காலம் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் குறித்து ஒரு தீர்வு எட்டப்பட்டு அதனடிப்படையில் நாம் சுயமாக எம்மை ஆளும் உரிமை பெற்று வாழும் நிலை உருவாக்கப்பட வேண்டும். அதை மூன்றாம் தரப்பினூடாகவே பெற்றுக் கொள்ள முடியும். அந்த மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை அமெரிக்கா எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

மேலும் யுத்தத்தின் பின்னர் வடகிழக்கில் தமிழ்மக்கள் மீது இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட அடாவடிகள் குறித்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் நாவாந்துறை சம்பவம் மற்றும் சேந்தாங்குளம், அளவெட்டி தாக்குதல் போன்றவற்றை எடுத்துக் காட்டினர்.

இதற்குப் பதிலளித்த இராஜதந்திரிகள் இராணுவமற்ற அமைதியான தீர்வொன்றை அரசாங்கத்திடம் வலியுறுத்துவோம் என்றனர்.

குறித்த சந்திப்பின்போது கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சி.சிறிதரன் ஆகியோரும் பிரதேச தலைவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (அ-2)

## நாட்டில் ஊழல் மோசடிகள் அதிகரித்த நிலையில் உள்ளன

### விதுர எம்.பி.தெரிவிப்பு

இலங்கையில் அதிகளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருவதாகவும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகள் இன்று நாட்டில் வழமையான விடயமாக மாறியுள்ளதாகவும் இந்த நாட்டில் வீதி கட்டட நிர்மாணம் அல்லது வேறும் அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவோர் எவ்வளவு தரகுப் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றே முதலில் கணக்குப் பார்க்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்று வரும் ஊழல் மோசடிகளை மக்களினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பாடசாலைக்கு மாணவர்களை சேர்க்க வேண்டுமாயினும் இலஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளது. இலவச கல்வியின் நிலமை இவ்வாறு மாறியுள்ளது என விக்ரமரட்ன குறிப்பிட்டுள்ளார்.

ஹொரனை பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

விதுர விக்ரமநாயக்க, முன்னாள் பிரதமரும் சிரேஷ்ட அமைச்சருமான ரட்னசிறி விக்கிரமநாயக்காவின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பல்கலை. போராட்டங்கள் எமக்கு பழக்கமானவை

### எஸ்.பி தெரிவிப்பு



பல்கலைக்கழகத்தின் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக சிலர் போராட்டம் நடத்தினாலும் அத்தகைய போராட்டங்கள் தமக்கு பழக்கமானவை என கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடொன்றினுள் உருவாகும் சிறந்த மாணவர்களே பல்கலைக் கழகங்களுக்கு வருவதாக குறிப்பிட்ட அமைச்சர் அவர்கள் அங்கிருந்து வெளியேறியதன் பின்னர் வேலையொன்றை தேடிக்கொள்ள முடியாமற் போகும் போது அவர்களை தூற்றுவதில் எந்தவித பயனும் இல்லையெனக் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேரா சிரியர்கள் மற்றும் உயர்கல்வி அமைச்சர் என்ற வகையில் இதற்கு தாமே பொறுப்புக் கூறவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் பல்கலைக்கழக உபவேந்தர்கள் மற்றும் விரிவுரையாளர் களை மாற்றுவதற்கு தயாராக வேண்டுமெனவும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## தொற்றாத நோய்கள் விவசாயிகளிடம் அதிகரிப்பு

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

விவசாயத்துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய தொழில்நுட்பங்கள் காரணமாக விவசாயிகளுக்கு தற்போது நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய் போன்ற தொற்றாத நோய்கள் ஏற்படும் வீதம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலனறுவை பகுதியில் பிராந்திய அலுவலகங்கள் மூன்றை திறந்து வைப்பதற்காக இடம்பெற்ற நிகழ்வின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சிகரெட் பாவனை, சீனி, வெங்காயம் போன்றவற்றை உணவில் கூடுதலாக சேர்த்தல் இதற்கு முக்கிய காரணங்களாக அமைவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் விவசாயிகள் வயல்களில் இறங்கி கடினமாக உழைத்ததாக கூறிய அமைச்சர் தற்போது நவீன தொழில்நுட்ப பாவனையால் இதற்கான சந்தர்ப்பம் குறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## மாகாணசபைகளுக்கு அதிகார பரவலாக்கம் முதலமைச்சர் மத்தியில் கருத்து வேறுபாடு

(கொழும்பு)

இலங்கையில் மாகாணங்களுக்கு 13 ஆவது அரசியலமைப்பின் அதிகாரங்கள் பகிரப்படுவது தொடர்பில் மாகாணங்களில் முதலமைச்சர் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

அண்மையில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா கொழும்பில் வைத்து அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஜனாதிபதியிடம் தெரிவித்ததையடுத்து முதல்மைச்சர்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

தென்மாகாண முதலமைச்சர் சான் விஜேலால் சில்வா தமது கருத்தில் அதிகாரங்களை ஒரு சமூகத்திற்கு பகிரப்பட கூடாது. அனைத்து இனங்களினதும் அபிலாசைகளை கருத்திற்கொண்டு அந்த அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் இன்றியே மாகாண சபைகள் சிறப்பாக தமது பணிகளை மேற்கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார்.

வடமத்திய மாகாண முதலமைச்சர் பேர்டி பிரேம்லால் திஸாநாயக்க இதே கருத்தை ஒத்த கருத்தையே வெளிப்படுத்தியுள்ளார். சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் தமது கருத்தில் 13 ஆவது அரசியலமைப்பு உடன்படிக்கையை உன்னிப்பாக ஆராய்ந்த பின்னரே அது குறித்து கருத்துகூற முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஜனாதிபதிக்கும் இந்திய வெளியுறவு அமைச்சருக்கும் இடையில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து தாம் எதனையும் அறிந்திருக்வில்லை என்று மஹிபால ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்படும் விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாட்டையே தாம் கொண்டுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுறை சந்திரகாந்தன் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். (அ-2)

## துப்பாக்கி வெடித்தது; சிறுவன் உயிரிழப்பு

(கொழும்பு)

மிஹிந்தலை, நாமல்ஓயா பகுதியில் கட்டுத் துப்பாக்கியொன்று வெடித்ததில் 12 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

குறித்த சிறுவனின் தந்தை கட்டுத் துப்பாக்கியை தயாரித்துக் கொண்டிருந்த வேளையில் துப்பாக்கி தவறுதலாக வெடித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் சிறுவனின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார். (அ-2)

# தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து இறுதி முடிவு காணப்பட வேண்டும்

## கம்யூனிஸ்ட்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

கடந்த 1974 ஆம் ஆண்டின் கச்சதீவு உடன்படிக்கையை மீண்டும் திறந்து தமிழக மீனவர்கள் நடுக்கடலில் தாக்கப்படும் சம்பவங்களுக்கு இறுதி முடிவை காண வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி தமிழக மீனவர்களின் சுமார் 600 படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் தாக்குதலுக்கு உள்ளானதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள கம்யூனிஸ்ட்கட்சியின் தலைவர்டி ராஜா இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு சென்று திரும்பியுள்ள நிலையில் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது கண்டனத்துக்குரியது என்று குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்திய அரசாங்கம் இதற்கு உரிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் ராஜா குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் கடற்படையினர் தமது 200 படகுகளை சேதம் செய்ததாகவும் 9 மீனவர்களை காணவில்லை என்றும் ராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# விடைத்தாள் மதிப்பீடு நடைபெறும் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையின் இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற 21 பாடசாலைகள் நேற்று தொடக்கம் மூடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிடுகின்றது.

குறித்த பாடசாலைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என அமைச்சு சுட்டிக்காட்டுகின்றது.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையின் இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

15 நகரங்களில் இந்த விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைள் முன்னெடுக்கப்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ எம்.என். ஜே.புஷ்பகுமார தெரிவிக்கின்றனார்.

இந்த விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-2)

# பாதாள உலகக்குழு உறுப்பினர்களை கைதுசெய்ய விசேட நடவடிக்கை

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவின் அடிப்படையில் நாடு முழுவதிலும் பதுங்கியிருக்கும் பாதாள உலகக் குழு உறுப்பினர்களை கைது செய்ய விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பை பேணும் நபர்களுக்கு எதிராக தராதரம் பார்க்காது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதனை தடுப்பதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

குறிப்பாக கடல் வழியாக செல்லக் கூடிய வாய்ப்புக்களை முடக்க விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

விசேட அதிரடிப்படை, பொலிஸ், முப்படையினர், புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட நாட்டின் சகல பாதுகாப்புத் தரப்பினரினதும் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

அரசியல்வாதிகளோ அல்லது ஏனைய தரப்பினரோ பாதாள உலகக் குழுக்களுக்கு ஆதரவளித்தால் அவர்களுக்கு தண்டனை விதிக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (அ-2)

# 10 இலட்சம் இறால் குஞ்சுகள் நீரேரியில் விடப்பட்டன

கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இறால் இருப்பு மட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் வட மாகாண சபையின் நிதி பங்களிப்பில் நேற்று முன்தினம் பத்து இலட்சம் இறால் குஞ்சுகள் சுண்டிக்குளம் கல்லாறு கடல் நீரேரியில் விடப்பட்டுள்ளன.

இதனை தொடர்ந்து வரும் கிழமைகளில் தட்டுவன்கொட்டி, ஆனையிறவு, நாகேந்திரபுரம் கடல் நீரேரிகளிலும் இறால் குஞ்சுகள் விடப்படவுள்ளன.

ஒட்டுமொத்தமாக 250 இலட்சம் இறால் குஞ்சுகள் மேற்படி கடல் நீரேரிகளில் விடப்படவுள்ளன. இதற்காக வட மாகாண சபை 13.65 மில்லியன் ரூபாவை செலவு செய்கின்றது.

நேற்று முன்தினம் இறால் குஞ்சுகள் விடும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், தேசிய நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் நிமல் சந்திரரட்ண, அந்நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி அசோகா, வடமாகாண மீன்பிடித்திணைக்கள பணிப்பாளர் மயூரன், கிளிநொச்சி மாவட்ட அரச செயலக உதவித்திட்டப்பணிப்பாளர் கேதீஸ்வரன், மாவட்ட மீன்பிடித்திணைக்கள உதவிப் பணிப்பாளர் கணேசமூர்த்தி, கூட்டுறவு உதவி ஆணையாளர் தவராசா மற்றும் கடற்றொழிலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இறால் குஞ்சுகளை கடல் நீரேரியில் விட்டனர். (எ-5)

# 2012.01 24 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 41-கலிகுலா கொலை செய்யப்பட்டான். அவனது மாமன் குளோடியஸ் முடி சூடினான்.

★ 1679-இங்கிலாந்தின் இரண்டாம் சார்ள்ஸ் நாடாளுமன்றத்தைக் கலைத்தார்.

★ 1857-தெற்காசியாவின் முதலாவது முழுமையான பல்கலைக்கழகமாக கொல்கத்தா பல்கலைக்கழகம் திறக்கப்பட்டது.

★ 1887- அபிசீனியப் படைகள் டொகாலி என்ற இடத்தில் இத்தாலியர்களைத் தோற்கடித்தனர்.

★ 1897-சுவாமி விவேகானந்தர் சிக்காகோவிலிருந்து நாடு திரும்பும் வழியில் யாழ்ப்பாணம் வருகை தந்தார். யாழ். இந்துக் கல்லூரியில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

★ 1908-பேடன் பவல் சாரணீய இயக்கத்தை ஆரம்பித்தார்.

★ 1918-கிரெகோரியின் நாட்காட்டி ரஷ்யாவில் பெப்ரவரி 14 முதல் அறிமுகப்படுத்தப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

★ 1924-ரஷ்யாவின் பெட்ரோகிராட் நகரம் லெனின் கிராட் எனப் பெயர் மாற்றப்பட்டது.

★ 1927-ஆல்பிரட் ஹிட்ச்கொக் தனது தபிளெஷர் கார்டன் என்ற முதலாவது திரைப்படத்தை வெளியிட்டார்.

★ 1939-சிலியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 30 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★ 1943-இரண்டாம் உலகப் போர்: பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், வின்ஸ்டன் சேர்ச்சில் ஆகியோர் தமது கசபிளாங்கா உச்சி மாநாட்டை முடித்துக் கொண்டனர்.

★ 1966-ஏர் இந்தியா விமானம் ஒன்று பிரான்சுக்கும் இத்தாலிக்கும் இடையில் வீழ்ந்ததில் 117 பேர் உயிரிழந்தார்.

★ 1972-இரண்டாம் உலகப் போரில் காணாமல் போன ஜப்பானிய படைவீரனான சொயிச்சி யாக்கோய் என்பவன் குவாம் காடு ஒன்றில் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டான்.

★ 1978-கொஸ்மொஸ் 954 என்ற சோவியத் செய்மதி பூமியின் வளிமண்டலத்துள் எரிந்து அதன் பகுதிகள் கனடாவின் வடமேற்குப் பிரதேசத்தில் வீழ்ந்தன.

★ 1984-முதலாவது ஆப்பிள் மாக்கின்டொஷ் கணனி விற்பனைக்கு வந்தது.

★ 1986-வொயேஜர் 2 விண்கலம் யுரேனசின் 81 ஆயிரத்து 500 கி. மீ. தூரத்துக்குள் வந்தது.

★ 1993-துருக்கிய ஊடகவியலாளரும் எழுத்தாளருமான ஊகுர் மும்க்கு அங்காராவில் கார்க் குண்டு வெடிப்பில் உயிரிழந்தார்.

★ 1996-மொஸ்கோவுக்கு உளவு பார்த்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் போலந்துப் பிரதமர் ஜோசப் அலெக்ஸ்கி தனது பதவியைத் துறந்தார்.

★ 2007-சூடானிலிருந்து 103 பயணிகளுடன் சென்ற விமானம் நடுவானில் கடத்தப்பட்டது.

★ 2009-இலங்கை ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட அரசுத் தலைவர் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் கொழும்பில் காணாமல் போனார்.

### இறப்புக்கள்

★ 1965-வின்ஸ்ரன் சேர்ச்சில், பிரித்தானியப் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1874)

★ 1966-ஹோமி பாபா, இந்திய அணு ஆராய்ச்சி நிபுணர் (பி.1891)



★ 1924- சி.பி.முத்தம்மா இந்தியப் பெண் சாதனையாளர் பிறந்த தினம் (இ.2009)

# சட்டத்துறை மாணவன் துசாரவுக்கு நீதியான தீர்ப்பு வழங்கப்படுமா?

ஐரோப்பாவைப் பொறுத்தளவில் இவ்வாறானதொரு சூழலை நினைத்துக்கூட பார்க்க முடியாது. அண்மையில் ஐரோப்பாவில் உயர்தகைமையைக் கொண்ட இருவர் ஏமாற்று மற்றும் அவதூறான நடவடிக்கைகளில் ஈடுபட்டமையால் அவர்கள் இதுவரை பெற்ற நன்மதிப்புக்கள் மற்றும் உயர்பட்டங்கள் என்பவற்றை இழந்துள்ளனர்.

இவ்வாறு ரேடியோ நெதர்லானட் வேல்ட் வைட் ஆர்.என்.டபிள்யு. ஒலி, ஒளிபரப்பு நிறுவனத்தின் இணையத்தளத்தில் **டீஹ் ராசுஜான்** எழுதியுள்ள செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010 டிசம்பர் மாதத்தில் இரு இளைய சட்டத்துறை மாணவர்கள் தமது பரீட்சைக்காக அமர்ந்திருந்தார்கள்.

இதில் ஒரு மாணவன் மண்டபம் நிறைந்த ஏனைய சட்டத்துறை மாணவர்கள் மத்தியில் அமர்ந்திருக்கிறார். இந்தப் பரீட்சை மண்டபத்தில் அமர்ந்திருந்த மாணவர்கள் பரீட்சை மேற்பார்வையாளரால் கண்காணிக்கப்பட்டனர். அதாவது இந்தப் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் தொலை பேசிகள், இலத்திரனியற்கருவிகள், மற்றும் ஏனைய ஏமாற்றும் வழிமுறைகளை உபயோகிக்கின்றனரா என்பதை பரீட்சை மேற்பார்வையாளர் உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

மற்றைய மாணவன்,குளிரூட்டி பொருத்தப்பட்டிருந்த தனி அறை ஒன்றிற்குள் கூட்டிச் செல்லப்பட்டார். இந்த அறைக்குள் இணையத் தொடர்புடன் கூடிய கணினி வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் குறிப்பிட்ட மாணவன் தொலைபேசியை பரீட்சை அறைக்குள் எடுத்துச் செல்வதற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது. இதற்கும் மேலாக, இவரிற்கும் பரீட்சையில் உதவுவதற்காக அல்லது அதற்கும் மேலாக பரீட்சையில் ஒத்துழைப்பு வழங்குவதற்காக இவர் படித்த சட்டக் கல்லூரியைச் சேர்ந்த இரு ஆசிரியர்களும் குறித்த பரீட்சை அறையில் இருப்பதற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.

ஐரோப்பாவைப் பொறுத்தளவில் இவ்வாறானதொரு சூழலை நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது. அண்மையில் ஐரோப்பாவில் உயர் தகைமையைக் கொண்ட இருவர் ஏமாற்று மற்றும் அவதூறான நடவடிக்கைகளில் ஈடுபட்டமையால் அவர்கள் இதுவரை பெற்ற நன்மதிப்புகள் மற்றும் உயர்பட்டங்கள் என்பவற்றை இழந்துள்ளனர். ஆனால், மனித உரிமைமீறல் விவகாரங்கள் தொடர்பில் அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் இலங்கையில் இவ்வாறான எந்த நடவடிக்கைகளும் குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக எடுக்கப்படுவதில்லை.

இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட மாணவன் வேறுயாருமில்லை. இலங்கையைத் தற்போது ஆட்சி செய்யும் குடும்பத்தின் வாரிசும், தீர்மானம் எடுக்கின்ற அதிகாரமுள்ள இளவரசருமான நாமல் ராஜபக்சவே இங்கு குறிப்பிடப்பட்ட இரண்டாவது மாணவனாவார்.

முதலில் குறிப்பிட்ட மாணவன் டி.எம்.துசார ஜெயரத்ன ஆவார். நாமல் ராஜபக்ச பரீட்சை விதிமுறைகளை மீறியதற்க்கு எதிராக துசார ஜெயரத்ன என்ற இச்சட்டக்கல்லூரி மாணவன் வழக்குத் தாக்கல் செய்துகொண்டபோது, இலங்கை சட்டக் கல்லூரியிலிருந்து இவரது சட்டத் துறைப்பட்டத்திற்குத் தேவையான பரீட்சைத்தாள் ஒன்றும் நீக்கப்பட்டிருந்தது.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் அமைதியாக இருக்குமாறு துசாரவிற்க்குக் கட்டளை இடப்பட்டதுடன், அவருக்கு எதிராக கொலை அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டது. ஆனால், அமைதியாக இருப்பதற்கு துசார விரும்பவில்லை.

இவர் இது தொடர்பாக சட்டக்கல்லூருக்கு முறைப்பாட்டை வழங்கினார். அத்துடன் மனித உரிமைகள் ஆணையகம், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஊடகங்கள் என்பவற்றிற்கு இது தொடர்பாக விண்ணப்பங்களை வழங்கினார். பி.பி.சி சிங்கள சேவைக்கு துசார இது தொடர்பாக நேர்காணல் ஒன்றை வழங்கிய பின்னர், அதுவரையில் நீடித்த நிலைமை உண்மையில் தலையிடியாக மாறத் தொடங்கியது.

அதிலிருந்து துசாரவிற்கு அச்சுறுத்தல் பாணியிலான பல தொலைபேசி அழைப்புகள் கிடைத்தன. இத்தொலை பேசி எண்கள் தொடர்பாக துசாரா ஆராய்ந்த போது அவை இலங்கை காவற்துறைக்குச் சொந்தமான பல்வேறு நிலையான மற்றும் செல்லிடத் தொலைபேசிகளிலிருந்து வந்த அழைப்புக்கள் என உறுதிப்படுத்தப்பட்டன.

இது தொடர்பாக துசார உரிய முறையில் காவல்துறையிடம் முறைப்பாடு செய்ய முயற்சித்தார். ஆனால், இந்த முறைப்பாட்டை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை காவல் துறையினர் மறுப்புத் தெரிவித்தனர். பின்னர் துசாரவின் வீட்டிற்கு வந்த இலங்கை காவற்துறையினர் அவரிடம் ஒரு தொகுதி ஆவணங்களைக் காட்டி அதில் கையெழுத்திடுமாறு வற்புறுத்தினர்.

ஆனால், அவற்றை வாசிப்பதற்கான அனுமதியை அவர்கள் துசாரவிற்கு வழங்கவில்லை. அத்துடன் அவற்றில் கையெழுத்திடுமாறும் எச்சரிக்கை செய்ததுடன், அவ்வாறு கையெழுத்திடாவிட்டால் துசாராவின் வீட்டிற்கு வெளியே வெள்ளைக் கொடி தொங்க விடப்படும் எனவும் சீருடையில் வந்த அதிகாரிகள் அச்சுறுத்தினர். (வீடொன்றின் முன் வெள்ளைக் கொடி தொங்க விடப்பட்டால் அங்கோ மரணம் நிகழ்ந்துள்ளது என்பதைத் தெரிவிப்பதற்கான பாரம்பரிய முறையாகும்.)

துசாரா இரு தடவைகள் கடத்தப்பட்டுள்ளார். முதற்தடவை 11 மணித்தியாலங்கள்வரை அவர் தடுத்து வைக்கப்பட்டார். துசாரவிற்கு உடல் ரீதியான துன்புறுத்தல்கள் முதற்தடவை வழங்கப்படாத போதிலும், மருத்துவம் செய்யுமளவிற்கு உளவியல் ரீதியாக அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தது. இரண்டாவது தடவையாக, அவர்கடத்தப்பட்டபோது, கடத்தியவர்கள் அமைதியாக இருந்து விடவில்லை. உடல்ரீதியாக துசார தாக்கப்பட்டார். இவர் கட்டியிருந்த **சறம்** அவிழ்ந்து விடும் அளவிற்கு அவர் மீது தாக்குதல் நடாத்தப்பட்டது. அதிலிருந்து இவரால் சரியாக நித்திரை கூட கொள்ள முடியாதுள்ளது.

இதேவேளையில், துசாராவின் தந்தையாரின் மூளையிலிருந்து இரு தடவைகள் இரத்தப்போக்கு ஏற்பட்டதால் அவர் வாய் பேச முடியாதவராக உள்ளார். இவரது தாயார் ஏற்கனவே நோயாளி ஆவார். இந்நிலையில்தான் வீட்டைவிட்டு வேறிடம் போவது, மிகச்சிறந்தது என துசாரா தீர்மானித்துக் கொண்டார். கடந்த ஏப்பிரலிருந்து இவர் தலைமறைவு வாழ்க்கை வாழ்கின்றார்.

இவரது அயலவர்கள் மற்றும் நண்பர்கள் ஆகியோரிடம் துசாரா தொடர்பாகத் தகவல்கள் கேட்கப்பட்டு அச்சுறுத்தப்படுகின்றனர். "இலங்கையில் உள்ள ஒவ்வொருவரும் அந்நாட்டு அரசாங்கத்தால் பீதியடைந்துள்ளனர். அரசாங்கத்திற்கு எதிராக எந்தச் செயலையும் முன்னெடுக்க அவர்கள் துணியமாட்டார்கள்" என துசாரா தெரிவிக்கின்றார்.

துசாரா தற்போது மிகமோசமான, பீதி வாழ்க்கையே வாழ்கின்றார். பட்டதாரியாகவோ அல்லது தொழில் தேடுநராகவோ இவரால் வாழ முடியாதுள்ளது. இதைவிட இவர் தனது குடும்பத்தைச் சென்று பார்வையிட முடியாதவராக உள்ளார். இவர் கற்ற கல்லூரி இவரை மீளவும் இணைத்துக் கொள்ள விரும்ப வில்லை. அதனால், அவரால் அங்கும் செல்ல முடியாதுள்ளது.

இவர் தற்போது பாதுகாப்பாக நித்திரை கொள்வதற்கான தங்குமிடத்திற்கும், தன்னை உயிர்வாழ வைப்பதற்கான உணவைப் பெறுவதற்காகவும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும், மனித உரிமை ஆர்வலர்களிலும் தங்கியுள்ளார். 'நான் ஒரு பிச்சைக்காரன்' என துசார தெரிவிக்கின்றார்.

துன்புறுத்தல்கள் முடிவிற்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்ற நம்பிகையில் துசாரா தனது கதையை மீண்டும் மீண்டும் ஊடகங்களிடம் எடுத்துக் கூறுகின்றார். ஆனால், வல்லமை பொருந்திய கோலியாத்தை எதிர்த்து நிராயுத பாணியாக நின்ற டேவிட் என்ற சிறுவனைப் போல துசாரவை நினைக்காமல் இருப்பதென்பது மனதிற்கு கடினமானதாகும்.

அதிபர் மகிந்த ராஜபக்ச, இலங்கையை குடும்ப அதிகார நாடாக மாற்றியுள்ளார். இவரது சகோதரர்கள் மற்றும் மகன்மார் பாதுகாப்பு, பொருளாதார முகாமைத்துவம் ஆகிய அமைச்சுகளின் உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். அத்துடன் ராஜபக்சக்களின் ஒருவர் நாடாளுமன்ற சபாநாயராகவும், ஏனையயோர் இராணுவ மற்றும் கடற்படைகளின் அதிஉயர் பதவிகளிலும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவரது உறவினர்கள் தூதர்களாகவும், மாகாணசபை அரசியல்வாதிகளாகவும், தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களின் பங்குகளைக் கட்டுபடுத்துகின்ற உயர் வணிகர்களாகவும் உள்ளனர். ஜனாதிபதியின் மூத்த மகனும், மேலே கூறப்பட்டவாறு பரீட்சையில் கலந்து கொண்டவருமான நாமல் நாடளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

ஆனால், துசாரா இவர்களிற்கு வேறு பெயர்களைக் குறிப்பிடுகிறார். 'அவர்கள் குற்றவாளிகள், காடை யர்கள்' என துசாராகூறுகின்றார். "இலங்கையில் மீண்டும் ஜனநாயகத்தைக் கொண்டுவர வேண்டும் என நான் விரும்புவதால், இந்த நாட்டை விட்டு நான் ஒரு போதும் வெளியேறப் போவதில்லை" எனவும் துசாரா தெரிவித்துள்ளார்.

"இந்நாட்டின் ஜனாதிபதி விதிவிலக்கைக் கொண்டுள்ளார். ஆனால், அவரது மகன் குற்றத்திலிருந்து தப்பித்துக் முடியாது, இருந்தும் எனது விடயத்தில் நாமல் ராஜபக்சவும் பாதுகாக்கப்பட்டுள்ளார், ஆகவே இவர் காடையனாக இருப்பதைவிட வேறொன்றாகவும் இருக்க முடியாது" எனவும் துசாரா மேலும் குறிப்பிட்டுள்ளார். இலங்கை ஜனாதிபதி ராஜபக்ச குடும்பத்தினர்-அரசியல் சட்டத்திற்கும் மேலானவர்கள்.

## நெதர்லாந்து ஊடகம் தெரிவிபபு

ஐரோப்பாவைப் பொறுத்தளவில் இவ்வாறான தொரு சூழலை நினைத்துக்கூட பார்க்க முடியாது. அண்மையில் ஐரோப்பாவில் உயர் தகைமையைக் கொண்ட இருவர் ஏமாற்று மற்றும் அவதூறான நடவடிக்கைகளில் ஈடுபட்டமையால் அவர்கள் இதுவரை பெற்ற நன்மதிப்புக்கள் மற்றும் உயர்பட்டங்கள் என்பவற்றை இழந்துள்ளனர்.

# நீரிழிவு நோயால் வரும் சில முக்கிய பிரச்சினைகள்



**12**

தனியாக இருந்தால் உடற்பயிற்சி செய்யுங்கள். உணர்ச்சி வசப்படுவதைத் தவிருங்கள். தசை இறுக்கத்தை தளர்த்துங்கள். மனதுக்கு இதமான இசை கேளுங்கள். நல்ல புத்தகங்களை படியுங்கள்.

உடற்பயிற்சி, சமச்சீரான உணவு முறை, நல்ல பழக்கவழக்கங்கள், குடும்பத்தினருடன் ஐக்கியம், வாழ்க்கை முறையில் நல்ல மாற்றம் போன்றவற்றை கைக்கொள்வது நல்லது. கூடுமானால் யோகா செய்யுங்கள்.

மூச்சை ஆழ்ந்து இழுத்து சுவாசிப்பதை வழக்கமாக வைத்துக் கொண்டால் மன இறுக்கம் குறையும்.

**மனஇறுக்க குறைபாடு எவ்வாறு உண்டாகுகிறது?**

மன இறுக்கம் போன்ற சூழல்களில் எதிலும் கவனம் செலுத்த முடியாத நிலை உண்டாகும். குடும்பத்தில் கூட பாலுறவு விடயங்களில் கவனம் செலுத்த இயலாது.

பாலுறவு விடயத்தில் இயலாமை ஏற்பட்டு விடும் என்ற எண்ணம், தாழ்வு மனப்பான்மை, கட்டுப்பாட்டை இழந்து விட்டோம் என்ற உணர்வு, தம்பதியருக்கிடையே நெருக்கம் இல்லாமை, அடிக்கடி தோன்றுகின்ற கோபம் போன்றவை பாலுறவு வேட்கையை பாதிக்கிறது. இவ்வாறே பாலுறவுக்கு ஒத்துக்கொள்ளாதபோது இயல்பாக பாலுறவு ஆற்றல் குறைய ஆரம்பித்து விடுகிறது.

நீரிழிவு நோய் கட்டுப்படுத்தப்படாத நிலையில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தால் முதலில் நீரிழிவுநோயைக் கட்டுப்படுத்தி கொள்ளுங்கள். பின்னர் உளவியல் மருத்துவ நிபுணரை அணுகி மன இறுக்கத்தைப் போக்கும் வழிகளை கேட்டறியுங்கள். சீனியைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளுங்கள்.

**நீரிழிவு நோயை மிகைப்படுத்தும் கொழுப்பு**

நீரிழிவு வியாதியை மிகைப்படுத்தும் விடயங்களில் மிக முக்கியமானவை உடற்பருமனும் கொழுப்புமாகும். இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்' பிணைந்தவை. இவற்றை பற்றி புரிந்து கொண்டால் நீரிழிவு வியாதியை கட்டுப்படுத்துவது எளிதாகிவிடும்.

நீரிழிவு நோயின் போது உடற்பருமன் ஏற்படுவதும் உடற்பருமன் உள்ளவர்களுக்கு நீரிழிவு நோய் வருவதும் இயல்பு.

இதை பற்றிய விடயங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள்.

நாம் உயிர்வாழ வேண்டுமானால், ஆரோக்கியமாக செயற்பட வேண்டுமானால் கொழுப்புச்சத்து மிக அவசியம்.

நமது உடலில் உள்ள ஒவ்வொரு செல்லுக்கும் இந்த கொழுப்பானது லைபோபுரோட்டீன்களாக மாற்றப்பட்டு இரத்த நாளங்கள் வழியாக உடலின் ஏனைய இடங்களுக்கு கடத்தப்படுகிறது. நமது உடலிலுள்ள ஈரல் தான் கொழுப்பை பல வகைகளில் தயாரித்துக்கொடுக்கிறது. உணவிலிருந்து சுமார் இருபது முதல் முப்பது வீதம் கொழுப்பைத் தயாரித்து விடுகிறது.

உடலுக்குத் தேவையான சத்தில் சுமார் நாற்பது வீத அளவு கொழுப்பு வடிவில் இருக்கும்.

இந்தக் கொழுப்பிலும் அடர்த்தி அதிகமான கொழுப்பு (எச்.டி.எல்), அடர்த்தி குறைந்த கொழுப்பு (எல்.டி.எல்),மிகக் குறைவான அடர்த்தியுள்ள கொழுப்பு, மிக அதிக அடர்த் தியுள்ள கொழுப்பு என நான்கு வகைகள் உள்ளன. இதில் பல உட்பிரிவுகளும் உள் ளன. அடர்த்தி அதிகமான கொழுப்பை நல்ல கொழுப்பு என்றும் அடர்த்தி குறைந்த கொழுப்பை கெட்ட கொழுப்பு என்றும் கூறுவார்கள்.

இவற்றை உண்டாக்கும் ஈரல், அதை உடலின் ஏனைய இடங்களுக்கு அனுப்பி வைக்கிறது. லைபோபுரோட்டீன்கள் மூலமாகச் செல்லும் கொழுப்புகள் இரத்த நாளத்தில் மிதந்து செல்லும். தேவையிருப்பின் சக்தியாக மாற்றப்பட்டு அவை செலவழிக்கப்படும். இல்லாவிட்டால் அப்படியே கொழுப்பு வடிவிலேயே சேமித்துக் கொள்ளப்படும்.

நல்ல கொழுப்பு குறைந்தாலும் கெட்ட கொழுப்பின் அளவு அதிகரித்தாலும் இரண்டுமே தேவையை விட குறைந்தாலும் நீரிழிவு நோயின்போது நாளங்கள் துரிதமாக கேடுற்று தொடர்ச்சியாக இதயம் பாதிக்கப்படும்.

இன்னொரு முக்கிய விடயம் என்னவென்றால் நமக்கு தினமும் இரண்டாயிரம் கலோரி சத்துக்கள் மட்டுமே தேவை. கூடுதலாக கிடைப்பவை எல்லாம் கிளைகோஜனாக மாற்றப்பட்டு உடலில் ஆங்காங்கே சேமித்து வைக்கப்படுகிறது. இதனால் உடல் எடை அதிகரிக்கிறது.

எடை கூடினால் தேவையில்லாமல் உடற்பருமனை சுமக்க வேண்டியிருக்கும். இதயத்திற்கும் கூடுதலான பணிச்சுமை அதிகரிக்கும். இதனால் இரத்த அழுத்தம் அதிகரிக்கும். நுரையீரலுக்குப் போதுமான ஒட்சிசன் கிடைக்காது.

கொழுப்புகள் அனைத்தும் கொழுப்புச் செல்களை விட தசைச் செல்களில்தான் அதிகமாக சேமித்து வைக்கப்பட்டிருக்கும். நமது உடம்பிலுள்ள அரை கிலோ தசையானது சுமார் 35 முதல் 45 கலோரிகளை செலவழிக்கும். ஆனால், இதே எடையுள்ள கொழுப்புத்திசு வெறும் இரண்டு கலோரிகளை மட்டுமே செலவழிக்கும். கொழுப்புத் திசுக்களை விட தசைத்திசுக்களே அதிகம் என்பதால்தான் நாம் உட்கார்ந்திருந்தாலும் நடந்தாலும் கலோரிகள் எரிக்கப்பட்டு செலவாகின்றன.

**காரணங்கள்**

உடற்பருமன் உண்டாவதற்கு முக்கிய காரணங்கள் என்று பார்த்தால் உடலில் சுரக்கும் ஓமோன்களில் மாறுபாடுகள், வாழ்க்கைமுறை, உடற்பயிற்சியின்மை, உணவு முறை ஆகியவையே முக்கிய இடத்தைப் பிடிக்கும். மேலே குறிப்பிட்ட காரணிகள் எவ்வாறு உடற்பருமனை தூண்டுகின்றன என்பதைப் பார்ப்போம்.

**பேராசிரியர்**
**டாக்டர்.டி.காமராஜ்,**
**M.D.,Ph.D.,P.G.D.C.G.,D.M.R.,**
**சென்னை.**

**ஓமோன் மாறுபாடுகள்**

உடற்பருமன் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானது, வயது வித்தியாசமில்லாமல் எல்லோருக்கும் உண்டாகிறது.

சொன்னால் சிரிக்கக்கூடாது. ஆண்களுக்கு முன்னாலும் (வயிற்றுப்பகுதி), பெண்களுக்குப் பின்னாலும் (புட்டப்பகுதி) அதிக கொழுப்பு சேர்கிறது. இதுவே ஓமோன் மாறுபாடுகளால் ஏற்பட்டிருந்தால் உடல் முழுவதும் பருமனாக இருக்கும்.

இளம் வயதில் அழகாக இருக்கும் பெண்களில் பலர் முப்பது, நாற்பது வயதுகளில் சதைப்பிண்டங்களாகக் காட்சியளிப்பதற்குக் காரணம் அவர்களின் கருப்பையில் சுரக்கும் ஈஸ்ரோஜன் என்ற ஓமோன் சுரப்பு குறைந்து விடுவதேயாகும். இதனால் உடலில் கொழுப்புச் சத்து அதிகரித்துவிடும்.

இரத்த கொழுப்பு அதிகரிப்பதால் இரத்த நாளங்கள் சுருங்கி பக்கவாதம், மாரடைப்பு போன்ற பிரச்சினைகள் உண்டாகின்றன.

கொழுப்பு உணவுகளோடு புகைப்பிடித்தல் போன்ற பழக்கம் இருந்தால் இன்னும் வேகமாக இரத்த நாளங்கள் பாதிக்கப்பட்டு இதய பாதிப்புகள் வருகின்றன. (தொடரும்)




# ஸ்போர்ட்ஸ் மெடிசன்



**02**

**ஆர்த்தோ பிடிக், பிசியோதெரபி துறைக்கும் ஸ்போர்ட்ஸ் மெடிசனுக்கும் என்ன வித்தியாசம்?**

சிகிச்சை, மருந்து எல்லாம் ஒன்றுதான் என்றாலும் பாதிக்கப்பட்டவரை உடனே முடிந்தால் ஐந்து நிமிடத்தில் அல்லது இரண்டே நாளில் குணப்படுத்துவோம். சாதாரணமாக மருந்து, மாத்திரை கொடுத்து பத்து நாட்கள் ஓய்வெடுக்கச் சொல்வார்கள். இது பொதுவானவர்களுக்கு ஒன்றும் சிரமமாகத் தெரியாது. விளையாட்டு வீரர்கள் ஒரு மணி நேரத்தைக்கூட இழக்க முடியாது. அவர்களை அவசர அவசரமாக அதேநேரத்தில் மனப்பாதிப்பு இல்லாமல் மீண்டும் விளையாட வைப்போம்.

**ஸ்போர்ட்ஸ் மெடிசனில் உளவியல் நிபுணரின் பங்கு என்ன?**

ஸ்போர்ட்ஸ் மெடிசனில் உளவியலும் ஒரு பகுதி பிசிஷியோ தெரபிஸ்ட், சைக்காலஜிஸ்ட், நியூட்ரிஷனிஸ்ட், பயோமெக்கானிக் உட்பட எல்லாமே இதில் அடங்குவர். ஒரு விளையாட்டு வீரருக்கு காயம், வலி என்று வைத்துக் கொள்வோம். அவர் உடனே குணமாக வேண்டும்.


அப்போதுதான் அவர் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொள்ள முடியும். தனது ரேங்கிலிருந்து சரியாமல் இருக்க முடியும். உடம்பு நோவிலிருந்து மீட்கும் அதேசமயம் மன தைரியத்தையும் பக்குவமாகத் தருவோம். சைக்கோலஜிகல் பூஸ்ட் அப்தான் ஒருவரை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும். மேலும் எப்படிப்பட்ட உடற்பயிற்சி தேவை... எப்படி அதனைச் செய்ய வேண்டும் என்பதை வழி காட்டுவோம். வீரர்களின் குடும்பத்தினரையே அழைத்துக் கலந்து பேசி வீட்டிலும் வீரருக்கான சூழலை சாதகமாக அமைத்துத் தருவோம்.

**இப்போது விளையாட்டு வீரர்களுக்கு பாதிப்பு அதிகமாக வருவது எதனால்?**

போட்டியில் வெற்றி பெற்றேயாக வேண்டுமென்ற வெறியில் விளையாடும்போதுதான் விபத்து ஏற்படுகிறது. நாங்கள் முடிந்த வரை காயம், சுளுக்கு, தசைப்பிடிப்பு இல்லாமல் விளையாடுவதற்குப் பயிற்சி அளிக்கிறோம். எங்களது பணியே விபத்து வருவதற்கு முன்பே தடுப்பதற்குப் பயிற்சி கொடுத்துக் கொண்டே இருப்பதுதான்.

**விளையாட்டு வீரர்களுக்கு உரிய உணவு ஆலோசனைகள் என்ன?**


ஸ்போர்ட்ஸ் மெடிசனில் டயட்டீஷனும் உண்டு. ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் எனர்ஜி எவ்வளவு செலவாகிறது என்பதைக் கணக்கிட்டு என்ன மாதிரியான சத்துணவு தேவை என்பதை சிபாரிசு செய்வோம். உதாரணமாக ஒன்றைச் சொல்ல வேண்டும். முன்பெல்லாம் கிரிக்கெட் விளையாட்டில் இடைவேளையின்போது சகல வீரர்களுக்கும் ஒரே மாதிரியான பானங்கள்தான் தரப்பட்டது. இப்போது துடுப்பாட்ட வீரருக்கு ஒரு மாதிரியும் பந்துவீச்சாளருக்கு ஒரு மாதிரியும் தரப்படுகிறது. விக்கெட் காப்பாளருக்கென்றும் தனியாக உண்டு.



விளையாட்டு வீரர்களுக்குப் பொதுவாக புரோட்டீன் அதிகம் தேவை. அதேபோல விளையாடும் நேரத்தில் காபோவைதரேற் அதிகம் தேவைப்படும். எனவே, விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சிக் காலத்தில் விளையாடும்போது என்று அவர்களுக்குக் காலத்திற்கேற்ற உணவினை சிபாரிசு செய்வதும் ஸ்போர்ட்ஸ் மெடிசனில் ஒரு அங்கமாகும்.

**விளையாட்டு வீரராக ஒருவர் எப்படி உடம்பைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்?**

சிறந்த விளையாட்டு வீரராக வேண்டும் என்று கனவுடன் இருந்து அதற்கேற்ப உடல் ஆரோக்கியம் இல்லாததனால் அந்தக் கனவு சிதைந்தவர்கள் ஏராளம். எனவே, வளரும் பருவத்திலேயே பெற்றோர்கள் அதில் கவனம் செலுத்த வேண்டும். ஸ்போர்ட்ஸ் மெடிசன் நிபுணரைக் கலந்தாலோசித்தால் அவர் நல்ல ஆலோசனைகள் தருவார். என்ன வகையான உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்பதை வழி காட்டுவார். குழந்தைகள் எப்போதும் பிசிக்கல் ஆக்டிவ்ட்டிசில் ஈடுபட்டுக்கொண்டே இருந்தாலே போதும்.



**டாக்டர்.மது தோட்டப்பிள்ளை,MS.,**
**சென்னை-4.**

பலபெற்றோர்கள் குழ நதைகள் விளையாட்டில் ஆர்வம் காட்டினால் எங்கே படிப்பிலிருந்து தடம் மாறிப் போய்விடுவார்களோ என்று பயம் கொள்கிறார்கள். இதுதான் பல மாணவர்கள் விளையாட்டில் கவனம் செலுத்தாதற்கு முதல் தடையாக இருக்கிறது. (முற்றும்)

# அரசுடனான பேச்சுக்களின் போது அரசின் நிலைப்பாட்டை கூட்டமைப்பு வெளிக்கொணரும்

## கனடாவில் சுமந்திரன் எம்.பி.உரை

(கொழும்பு)

இலங்கை விவகாரத்தில் செயற்படும் கனேடியஅரசின் செயற்பாடு எங்களின் மக்களிற்கு பெரிய நம்பிக்கையும் பேரெழுச்சியும் தருகிறது. வெற்றியோ தோல்வியோ தீர்வுக்கான முயற்சிகளை தொடர்வதே தமிழினத்தின் இன்றைய தேவை என கூட்டமைப்பின் பா. உ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கனடாவில் இடம்பெற்ற பொங்கல் விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழத்தின் இன்றைய யதார்த்தத்தை அப்படியே கனேடிய மக்கள் பிரதிநிதிகளின்கண்முன்னேகொண்டு வந்து அழகான உரைநடையில் வேற்றினத்தவரின் கவனத்திற்கு கொண்டு வந்த சுமந்திரன் தாங்கள் கடந்த ஒக்டோபர் மாதம் அமெரிக்கா, கனடா வந்ததிலிருந்து தாயகத்திலிருப்பதை விட மேற்குலகிற்கும் வேறுநாடுகளிற்கும் பயணித்துதமிழ் மக்களின் பிரச்சினையை உலகமயப்படுத்துவதிலேயே தன்னை அர்ப்பணித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழ் மக்களின் சார்பில் கனேடிய அரசிற்கு நன்றியைத் தெரிவித்துள்ளார். கனடா இப்படிக் கொள்கை வழி நிற்பது மற்றைய நாடுகளின் இராஜ தந்திரிகளுடன் உரையாடும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு பெரியதொரு பலமாக அமைந்துள் ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உலக வரலாற்றில் போரின் முடிவுகளிளெல்லாம் வெற்றிபெறும் தரப்பு முழுவதையுமே அபகரித்து அனுபவிப்பதும் தோற்றுப்போன தரப்பு அனைத்தையுமே இழப்பதும் தான் வழக்கம் என்றும் அதுபோலவே ஈழத்தில் நடந்தாலும் மற்றைய இடங்களில் போரின் பின்னர் தலைமை மாற்றம் பெற்றது. ஆனால் மஹிந்தவும் அவரது சகோதரர்களும் தொடர்ந்தும் ஆட்சியில் நிலைப்பது தமிழர்களிற்கான பலவீனமாக அமைந்து விட்டது என்றும் குறிப்பிட்டார்.

இப்போது இடம்பெறும் பேச்சுக்களைப் பற்றி பலரும் பலவாறாகப் பேசுகிறார்கள். ஆனால் யதார்த்தத்தின் படி இந்தப் பேச்சில் தொடர்ந்தும் நிலைத்து நின்றாலேயே தமிழர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதோடு இன்றுவரையுமான பேச்சுக்களில் அரசு பல தடவைகள் மறுத்துப் பேச்சுக்கள் தடைப்பட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோள்களை மஹிந்த தரப்பு ஏற்றதால் மாத்திரமே பேச்சு இழுபட்டபடி தொடர்கிறது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறங்கிப் போகவில்லை என்றும் குறிப்பிட்டார்.



மேற்குலகின் அனுசரணையுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்தப் பேச்சில் இலங்கையின் நிலைப்பாட்டை வெளிகொணரும் எனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்களிற்கு வேறு தெரிவுகள் இருந்த போதும் அவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்ததன் மூலம் வழங்கப்பட்ட பொறுப்பை நாங்கள் நிறைவேற்றியேயாக வேண்டும் என்பதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுதியாகவுள்ளதாகவும் கூறினார்.

வடக்கு, கிழக்கு இணைந்த ஒரு தமிழர் தாயகம் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டுமெனவும் தாயகத்திலுள்ள மக்களிடமும் உலகப்பந்தில் சரியான முடிவுகளை எட்டும் நாடுகளின் தலைமைகளிடமும் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ள இன்றைய நிலையில் இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான உங்களின் ஆதரவை நாங்கள் வேண்டி நிற்கின்றோம் என்றும் கூறினார். (அ-2)

## யாழ்ப்பானம் -கொழும்பு விமான சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் மீண்டும் விமான சேவையை ஆரம்பிக்கப் போவதாக எக்ஸ்போ எவியெசன் நிறுவனம் அறிவித்துள்ளது.

இவ்விமான சேவையை நாளொன்றுக்கு இரண்டு சேவைகளை நடத்தவுள்ளதாகவும் இதற்கு 12 ஆசனங்களைக் கொண்ட விமானங்களை பயன்படுத்தவுள்ளதாகவும் எக்ஸ்போ எவியெசன் நிறுவனம் அறிவித்துள்ளது.

விமான சேவையை ஆரம்பிக்க இலங்கையின் குடியியல் விமான சேவை அதிகாரசபையின் அனுமதிக்காக காத்திருப்பதாகவும் மேற்படி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏ-9 வீதி திறக்கப்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு நாளொன்றுக்கு சுமார் 200 பேர் விமானம் மூலம் பயணம் செய்து வந்தனர்.

தற்போது ஏ-9 வீதி திறந்து விடப்பட்டுள்ள நிலையில் நாளொன்றுக்குத் தேவைப்படும் விமானப் பயண ஆசனங்களின் எண்ணிக்கை 36 ஆக குறைந்துள்ளதாகவும் எக்ஸ்போ எவியெசன் நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது. (அ-2)

## வடக்கு, கிழக்கில் பணியாற்ற அரச ஊழியர்கள் முன்வர வேண்டும்

### அமைச்சர் மைத்திரிபால அழைப்பு

(கொழும்பு)

யுத்த பாதிப்புக்கு இலக்கான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணியாற்ற தயங்கி அங்கு யாரும் செல்லாமல் இருந்தால் அந்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முடியாது போகும் என அரசாங்கம் தெரிவித்துள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



தற்போது பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்களில் இருந்து சாதாரண விவசாயிகள் வரையில் வீட்டில் இருந்தே செல்லக்கூடிய தொழில்களையே எதிர்பார்க்கின்றனர்.

இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வைத்தியர்கள், ஆசிரியர்கள், அஞ்சல் ஊழியர்கள், தாதியர்கள் என யாரும் செல்ல தயங்குகின்றனர்.

அவ்வாறு தயங்குவதால் நாட்டின் அபிவிருத்தியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களையும் இணைத்துக்கொண்டு செயற்படுவதில் சிக்கல் ஏற்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

## கைதிகள் தப்ப முயற்சி

(கொழும்பு)

காலி சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரும் கைதியொருவரும் நேற்று காலை தப்பிச்செல்ல மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை அதிகாரி ஒருவரைத் தாக்கிவிட்டு அவர்கள் தப்பிச் செல்ல முயற்சித்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் பி.டபிள்யூ. கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

தப்பிச் செல்ல முயற்சித்த கைதிகளைத் தடுப்பதற்கு அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சியின்போது காயமடைந்த இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ-2)


கண்ணீர் அஞ்சலி

அமரர் முத்துக்குமாரு தம்பிஜயா



தோற்றம் 31.03.1930

மறைவு 21.01.2012

எமது பாடசாலையின் முன்னைநாள் அதிபரும் எமது தற் போதைய அதிபரின் தந்தையும் ஆகிய அமரர் முத்துக்குமாரு தம்பிஐயா அவர்களின் திடீர் மறைவு குறித்து எமது கண்ணீரினை காணிக்கையாக்குகின்றோம். அன்னார் எமது பாடசாலை யினை வளர்த்தெடுப்பதற்கு செய்த சேவை அளப்பரியது. ஐயா...! தம்பி ஐயா திருவடி நிலையின் தூணே சரிந்தது ஏனோ...!

அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

யாழ்/ திருவடிநிலை சை.த.க.பாடசாலை

ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர்.



அந்தியேட்டி அழைப்ப

அமரர் தர்மலிங்கம்– ருக்மணி

அன்புடையீர்,
கடந்த கரவருடம் (26.12.2011)அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வமாகிய
**அமரர் தர்மலிங்கம்– ருக்மணி**
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 25.01.2012 புதன்கிழமை அதிகாலை 6.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து இவ் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி



ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

# மிஹின்லங்கா விமானசேவைக்கு இதுவரை ரூ.5547கோடி முதலீடு

## சிவில் விமான சேவைகள் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

மிஹின்லங்கா விமானசேவைக்கென இதுவரையில் ரூ.55,470,030,810 முதலீடு செய்யப்பட்டிருப்பதாக சிவில் விமானசேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன அண்மையில் தகவல் வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை அமர்வின் போது ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. ரவி கருணாநாயக்கவினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் இங்கு மேலும் கூறுகையில்,

மிஹின்லங்கா விமான சேவைக்கென 2007,2008 ஆம் ஆண்டுகளில் தலா 500 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்ட அதேவேளை 2009 ஆம் ஆண்டில் மூவாயிரம் மில்லியன் ரூபாவும் 2010 இல் ஆயிரத்து 680 மில்லியன் ரூபாவும் 2011 இல் ஆயிரத்து 700 மில்லியன் ரூபாவும் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்நிறுவனத்தின் ஆரம்ப முதலீடாக 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மிஹின்லங்கா விமான சேவை நிறுவனத்துக்கென இதுவரையில் மொத்தமாக 55, 470, 030, 810 ரூபா முதலிடப்பட்டுள்ளது என்றார். (அ-2)

# எங்களை அடைத்துவைத்துவிட்டு தைப்பொங்கலை நடத்தலாமா?

## கைதிகள் அமைச்சரிடம் கேள்வி

(கொழும்பு)

தமிழ் இளைஞர்களை சிறையில் அடைத்துவிட்டு பொங்கல் விழாவை நடத்துவது நியாயமா என கேட்டு மட்டக்களப்புச் சிறைச்சாலையிலுள்ள தமிழ்க்கைதிகள் சிலர் நேற்று முன்தினம் சிறைச்சாலையில் நடைபெற்ற பொங்கல் விழாவின்போது சத்தமிட்டுக் கோஷங்களை எழுப்பினர்.

இவர்களுக்குக் கேட்கத்தக்கதாக மட்டக்களப்புச் சிறைச்சாலையின் மேல்மாடியில் வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகள் சிலர் சபதமிட்டுக் கோஷங்களை எழுப்பியுள்ளனர்.

தமிழர்களாகிய எங்களை சிறைக்குள் பூட்டி அடைத்துவிட்டு எங்களுடைய தைப்பொங்கல் விழாவை நடத்துவது நியாயமா? நாங்கள் அமைச்சர் மற்றும் பிரதியமைச்சருடன் பேசவேண்டும். நத்தார் தினத்தன்று உறவினர்களை பார்ப்பதற்கு அனுமதித்த சிறைச்சாலை அதிகாரிகள் பொங்கலன்று எங்களைப் பார்க்க எங்களின் உறவினர்களை அனுமதிக்கவில்லை மற்றும் இங்கு எங்களுக்குள் உள்ள பிரச்சினைகளை தீர்த்துத் தாருங்கள் ஆகிய கோஷங்களை கைதிகள் எழுப்பினர்.

இதையடுத்து அமைச்சர் கஜதீர, பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா மற்றும் அதிகாரிகள் உள்ளிட்டோர் இவர்களைச் சந்தித்துக் குறைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

இவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் கஜதீர இதன்போது கைதிகளிடம் உறுதியளித்தார்.

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொங்கல் விழாவில் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-2)



யா/ ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மாணவர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா, நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, பாடசாலை அதிபர் மு.முரளிதரன் ஆகியோர் அருகில் நிற்பதையும் விசேட தேவையுடைய மாணவி ஒருவருக்கு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 2012 ஆம் கல்வியாண்டிற்கான முழுநேர மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் பெப்ரவரி 8 ஆம் திகதி புதன்கிழமையும் பகுதி நேர மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமையும் ஆரம்பிக்கப்படவுள்ளது என பணிப்பாளர் எஸ். விஜயநாதன் அறிவித்துள்ளார். (அ)

# விளையாட்டுக்கழகங்களை பதிவு செய்யவும்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இடப்பெயர்வுக்கு முன்னர் இயங்கிய விளையாட்டுக் கழகங்களும் தற்போது மீள்குடியேற்றத்தின் பின்னர் இயங்கியும் பதிவுகளை மேற்கொள்ளாத விளையாட்டுக் கழகங்களும் புதிதாக விளையாட்டுக் கழகங்களை அமைக்க விரும்புகின்றவர்களும் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கரைதுறைப்பற்று விளையாட்டு உத்தியோகத்தர் க.மாதவஜெயபிரகாஷ் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களை அறிய விரும்புவோர் 0772675414 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# சர்வதேச யுத்தக்குற்ற விசாரணை நடைபெற வேண்டுமென சிலர் முயற்சி

## வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியது

(கொழும்பு)

சர்வதேச யுத்தக் குற்றச் செயல்கள் விசாரணைகளை நடத்த வேண்டுமென சிலர் வலியுறுத்தும் முயற்சிகளில் சில தரப்பினர் ஈடுபட்டுள்ளதாக அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மையில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் இவ்வாறான கூட்டங்கள் நடைபெறுவதாக வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமைப் பேரவை மாநாடுகளின் போது இலங்கையை நெருக்கடிக்கு உள்ளாக்கும் முனைப்புக்கள் கடந்த காலங்களிலும் இடம்பெற்றுள்ளதாக அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள அமர்வுகளின் போதும் சில தரப்பினர் இலங்கை மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்க தயாராகி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கான அடித்தளமாக இவ்வாறான கூட்டங்கள் மற்றும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# பேருந்து கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை

## தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றத்திற்கு அமைவாக பேருந்து கட்டணங்களை அதிகரிக்க அரசாங்கம் இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என தனியார் பேருந்து உரிமையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதன் காரணமாக பெரும் நட்டத்தை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் மானியம் அல்லது பேருந்து கட்டண உயர்வை வழங்குவதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என அவர் கூறியுள்ளார்.

தமது பிரச்சினைக்குத் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதில் இழுபறி நிலை காணப்படுவதாகவும் நாளாந்தம் மிகுந்த சிரமத்திற்கு மத்தியிலேயே பஸ் சேவைகளை முன்னெடுக்க நேரிட்டுள்ளதாகவும் கெமனு விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதற்கான யோசனைகளை மீண்டும் அமைச்சரவையில் சமர்ப்பித்து அனுமதியை பெற்றுக் கொள்ளுமாறு தனியார் போக்குவரத்து அமைச்சின் செயலாளரிடம் இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில் எரிபொருள் விலையேற்றம் காரணமாக ஏற்பட்டுள்ள நட்டம் குறித்து ஆராய்வதற்காக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அதன் பணிப்பாளர் சபையை அவசரமாக கூட்டியுள்ளது.

இந்தக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

இது தெடர்பாக தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி. ரத்நாயக்க தெரிவிக்கையில்,

தனியார் பஸ் சங்கங்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தைக்குத் தயாராகவே இருப்பதாக கூறினார். (அ-2)

# இனவாத குழுக்களுக்கு தேவையான அடிப்படையை ஆணைக்குழு ஏற்படுத்தியுள்ளது

## சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

பிரிவினைவாதிகள் வடக்கு, கிழக்கில் ஏற்படுத்திய திரிபுபடுத்தலை மேலும் உறுதிப்படுத்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கை மூலம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். பிரிவினைவாதத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் பொருத்தமான காலம் தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை யுத்தத்தில் வெற்றிபெறும் என வெளிநாடுகளோ, இந்தியாவோ இலங்கையில் வாழும் பலரோ நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. இந்த தோல்வியுடன் அவர்கள் தொடர்ந்தும் இலங்கை மீது விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் வடக்கு, கிழக்கில் பிரிவினைவாதிகள் ஏற்படுத்திய திரிபை உறுதிப்படுத்த ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. இனவாத குழுக்களுக்கு தேவையான அடிப்படையை ஆணைக்குழு ஏற்படுத்தி கொடுத்துள்ளது. அவர்களின் வைராக்கியத்திற்கு எமது கருணையை வெளிப்படுத்த இடமளிக்கமுடியாது.

4 வீதமாக உள்ள தமிழர்களுக்கு நாட்டில் 96 வீத பெரும்பான்மை இனத்தை அடிபணிய செய்ய இடமளிக்க முடியாது. வெளிநாடுகள் இலங்கையில் அனர்த்தத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றன எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## போலி கடவுச்சீட்டு முகவர்கள் அடையாளம் காணப்பட்டனர்

இலங்கையர்களுக்கு சட்டவிரோதமான கடவுச் சீட்டுக்களை வழங்கி வெளிநாடுகளுக்கு அனுப்பி வந்த முக்கிய முகவர்கள் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இந்திய பயங்கரவாத தடுப்பு பிரிவின் அறிக்கை ஒன்றை மேற்கோள்காட்டி இந்திய ஊடகம் ஒன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இலங்கை மற்றும் பங்களாதேஸ் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு போலியான கடவுச் சீட்டு மற்றும் விசாக்களை வழங்கி அவுஸ்திரேலியா, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அவர்கள் அனுப்பி வைத்துள்ளனர். இவர்கள் மும்பை, டில்லி மற்றும் குஜராத் போன்ற மாநிலங்களை தளமாக கொண்டு செயற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# பல்வேறு பிரச்சினைகளுடன் காணப்படும் பூநகரி பிரதேசம்

## நடவடிக்கை எடுக்க கோருகிறது பூநகரி பிரதேசசபை

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் இவ்வாண்டிலும் போக்குவரத்துச் சேவை, சுகாதார சேவை என்பன சீரின்றியே காணப்படுகின்றது என பூநகரி பிரதேச சபைத் தலைவர் பொ.சிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நகரப்பகுதியுடன் பூநகரி இணைந்து கொள்வதற்கான போக்குவரத்துச் சேவையானது மிகக்குறைந்தளவாகவே உள்ளது. இதனால் பொதுமக்கள், ஊழியர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

அண்மையில் பிரதேச சபையில் சேவையாற்றுவதற்கு நான்கு பட்டதாரிகள் நியமனம் பெற்றனர். ஆனால், இதில் இருவர் மட்டுமே கடமை புரிய வந்தனர். அவர்களில் ஒருவர் போக்குவரத்து சீரின்மையால் கிளிநொச்சி மாவட்டத்திற்கு மாற்றலாகி சென்று விட்டார்.

இப் போக்குவரத்து சீரின்மை பற்றி போக்குவரத்து சபைக்கு தெரிவித்த போதும் அதற்கான பலன் எதுவும் இல்லை.

இதனால் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு செல்லும் அவசர சிகிச்சைப்பிரிவு நோயாளர்கள் அம்புலன்ஸ் உதவியுடன் கொண்டு செல்லப்படுவர். ஆனால், அவர்களுக்கு துணையாக செல்ல வேண்டியவர்கள் கிளிநொச்சி ஊடாகச் செல்லும் பஸ்ஸில் சென்று கிளிநொச்சி நகரில் 100 ரூபா கொடுத்து ஆட்டோ பிடித்து செல்ல வேண்டியுள்ளது. இந்நிலையில் சாதாரண நோயாளிகள், கிளினிக் செல்வோர் எவ்வாறு கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு செல்ல முடியும். சாதாரண நோயுடன் செல்லும் நோயாளிகளும் கடும் நோயாளராகும் நிலையே காணப்படுகின்றது.

மேலும் அலுவலகங்களுக்கு செல்பவர்களும் இவ்வாறான போக்குவரத்து சீரின்மை காரணமாக பல்வேறு இன்னல்களை அனுபவிக்கின்றனர்.

கல்வி கற்ற வளமான ஊழியர்களை கொண்ட மாவட்டமாக கிளிநொச்சி மாறி வருகின்ற போதும் வளங்களை திட்ட மிட்ட முறையில் பயன்படுத்த முடியாத மாவட்டமாக திகழ்கின்றது. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

## சிறார்கள் மீதான வல்லுறவுகளுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும்

### அனோமா திஸாநாயக்க தெரிவிப்பு

சிறார்கள் மீதான பாலியல் வல்லுறவுகள் தொந்தரவுகளுக்கு மரண தண்டனை வழங்குதல், சிறுவர் துஷ்பிரயோகத்தை பிணையில் வெளிவர முடியாத குற்றமாக கருதுதல் உட்பட கடுமையான சட்டங்களை இயற்றுவதற்கான யோசனைகளை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை முன்வைத்துள்ளதாக அச்சபையின் தலைவி அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சிறார்கள் மீதான வன்முறைகள் அண்மைக்காலத்தில் வெகுவாக அதிகரித்துள்ளதாகவும் இந்நிலை கட்டுக்கடங்காமல் போவதற்குமுன் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.


தற்போதுள்ள சட்டங்களின்படி சிறார்கள் மீதான வல்லுறவும் சாதாரண வல்லுறவாகவே கருதப்படுவதுடன் அதற்கு 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. சிறார்கள் மீதான வன்முறைகள் அதிகரிக்கப்படுவதன்மூலம் குற்றவாளிகளுக்கு உரிய செய்தி வழங்கப்பட வேண்டும் என திருமதி திஸாநாயக்க கூறினார். (அ-2)

## பிரகீத் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்

ஊடகவியாளர் பிரகீத் எக்னெலியகொட கடத்திச் செல்லப்பட்டு கிழக்கு மாகாணத்தில் இரகசியமான இடமொன்றில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டதாக இத்தாலிக்கு தப்பிச் சென்றுள்ள பாதாள உலகக் குழுவின் உறுப்பினரான பிரதீப் என்பவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் முக்கிய ஆதரவாளரான பிரதீப் பாதாள உலக்குழுக்களுக்கு எதிரான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இலங்கையில் இருந்து தப்பிச் சென்றார்.

எவ்வாறாயினும் இன்று ஊடகவியலாளர் எக்னெலியகொட காணாமல் போய் இர ண்டு வருடங்கள் பூர்த்தியாகவுள்ளது. அவர் காணாமல் போன சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக கூறப்படும் விசாரணைகளில் இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை என்பது இந்த சம்பவம் தொடர்பாக எவரும் இதுவரை கைது செய்யப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)



காலி இலக்கிய விழா கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இவ் இலக்கிய விழாவில் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த பல எழுத்தாளர்கள் பங்கு பற்றி கண்காட்சியை பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

## சிலை உடைப்பு விவகாரம்; வாசுவின் நேரடி கவனத்திற்கு

(கொழும்பு)

ஆரையம்பதி பிரதான வீதியில் அமைக்கப்பட்டிருந்த சுவாமி விவேகானந்தரின் சிலை அண்மையில் சேதமாக்கப்பட்ட விவகாரத்தை பட்டிருப்புத் தொகுதி இடதுசாரி ஜனநாயக அமைப்பு வன்மையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளதுடன் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் நேரடிக் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளது.

கண்டன அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு- ஆரையம்பதி பிரதான வீதியில் அமைக்கப்பட்டிருந்த சுவாமி விவேகானந்தரின் சிலை சேதப்படுத்தியதை பட்டிருப்பு தொகுதி ஜனநாயக இடதுசாரி முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

இது நல்லுறவை விரும்பாத விஷமத்தனமான திட்டமிட்ட செயலாகவே எமது அமைப்பு கருதுகின்றது. இத்தகைய செயல்கள் முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டியவை. இது மிகவும் கவலையும் துயரமும் தரும் விடயமாகும்.

சுவாமி விவேகானந்தர் அனைத்து மதங்களாலும் பெரிதும் மதிக்கப்பட்ட துறவியாவார்.

இந்து சமய மக்களால் சிறந்ததொரு வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு தலைமைக் குருவாக அவர்களின் செஞ்சங்களில் வீற்றிருந்த மகானாகும்.

இந்துக்களின் மனதை வெகுவாகப் புண்படுத்தியுள்ள இச்செயல் இனிமேலும் இடம் பெறாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டியது இந்த அரசின் முக்கிய கடமையாகும்.

இன நல்லுறவையும் இன ஐக்கியத்தையும் சமத்துவத்தையும் நேசிக்கின்ற மக்களுக்கு இது ஒரு சவாலான விடயமாக அமைந்துள்ளது.

எனவே, இவ்விடயத்தை தமிழ் மக்களுக்காக ஓயாது குரல் கொடுத்து வருகின்ற மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் நேரடிக் கவனத்திற்கு தகுந்த நடவடிக்கைகளை அரசு மூலம் மேற்கொள்வதற்கு பட்டிருப்பு தொகுதி ஜனநாயக இடதுசாரி முன்னணி கொண்டு வந்துள்ளதென அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையை பட்டிருப்புத் தொகுதியின் அமைப்பாளரும் அமைச்சர் வாசுவின் இணைப்பாளருமான க.பரணிதரன் உத்தியோகபூர்வமாக முன்னணியின் சார்பாக வெளியிட்டுள்ளார். (அ-2)

## பொன்சேகா, சேனக்கவுக்கு எதிராக 41 குற்றச்சாட்டுக்கள்

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மற்றும் அவரது செயலாளராக கடமையாற்றிய ஓய்வுபெற்ற கப்டன் சேனக்க ஹரிப்பிரிய டி சில்வா ஆகியோருக்கு எதிராக 41 குற்றச்சாட்டுக்களின் கீழ் தாக்கல் செய்யப் பட்டுள்ள வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை இடம்பெற்றது.

முன்னாள் இராணுவத் தளபதிக்கும் அவரது செயலளாராக கடமையாற்றியவருக்கும் எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நேற்று நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டன.

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களுடன் தொடர்பினை வைத்திருந்தமை, அவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட நடவடிக்கை மேற்கொண்டமை உள்ளிட்ட 41 குற்றச்சாட்டுக்கள் இதில் அடங்குகின்றன.

எவ்வாறாயினும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தாம் நிரபராதிகள் என பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

சமர்ப்பிக்கப்பட்ட 19 குற்றச்சாட்டுக்களில் சிறு தவறுகள் காணப்படுவதால் அவற்றை திருத்துவதற்கு அனுமதி வழங்குமாறு மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தமித் தொட்டவத்த நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நீதிமன்ற அனுமதியுடன் அந்த தவறுகள் திருத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் அந்த நடவடிக்கை தொடர்பில் எதிர்ப்பை வெளியிட்ட பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணி உபுல் ஜயசூரிய அது தொடர்பான ஆட்சேபனைகளை மீண்டும் வழக்கு விசாரணை இடம்பெறும் தினத்தில் சமர்ப்பிப்பதாக கூறியுள்ளார்.

இதேவேளை, தமது தரப்பினரிடம் கேட்டறிந்து மீண்டும் விசாரணை நடைபெறும் போது அறிவிப்பதாக பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (அ-2)

மனிதனின் செயல்களில் அவன் கவலைப்படத் தகுதியானது எதுவுமே கிடையாது.

– பிளேட்டோ.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# திருவாரூரில் பிறந்தால் முக்தி காசியில் இறந்தால் முக்தி யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தால் முக்தி

திருத்தலங்களின் பெருமையால் சிறப்புப் பெற்ற ஊர்கள் உண்டு.

தெய்வீகத் தன்மையின் பெருமையை உணர்த்த அருளாளர்கள் கையாண்ட நுட்பங்கள் ஏராளம்.

அதில் திருவாரூரில் பிறந்தால் முக்தி ;காசியில் இறந்தால் முக்தி. அண்ணாமலையை நினைத்தால் முக்தி என்று கூறினார்கள்.

இங்கு கூறப்பட்டவை சிவஸ்தலங்களின் பெருமையால் ஏற்பட்டவை.

இவை ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணத்தவர்களின் அனுபவிப்புகள், பாடுகள் என்பவற்றை நோக்கும்போது யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தால் நிச்சயம் முக்தி கிடைக்கும் என்று எண்ணத் தோன்றும்.

யுத்தத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு, சொத்தழிவு, அங்கவீனம், ஏழ்மை, தொழில் இன்மை என்ற துயரத்தோடு வாழ்க்கை கழிகின்றது.

இதில் நாம் செய்த பாவத்தின் 50 வீதம் தொலைந்து போகும்.

மீதி ஐம்பது வீதப் பாவத்தை அனுபவிப்பது எங்ஙனம் என்றால்,அதற்குத்தான் எங்களிடம் இருக்கக்கூடிய கிருமிநாசினி தெளித்த மரக்கறி வகைகள், போமலினால் அபிஷேகம் செய்யப்பட்ட பழவகைகள், வீதியில் புழுதிப் புயல் தோய்ந்து குன்று குழிகளில் விழுந்து எழுந்து செல்லும் பயணம்,

விடிந்தால் பனித் தொல்லை. செக்கலானால் நுளம்புத் தொல்லை. இருட்டானால் திருடர் தொல்லை. பகலானால் பிழைப்புத் தொல்லை.

இத்தனைக்கும் மத்தியில் கோயில் வழக்கு, காணி எல்லை வழக்கு. கட்டியவன் கைவிட்ட வழக்கு, விவாகரத்து கேட்கும் வழக்கு.

என்னே வாழ்க்கை. பெற்ற பிள்ளைக்கு பள்ளியில் அனுமதி கேட்டு அலையும் துயரம், ஆசிரியர் இடமாற்றத்தால் அலையும் பரிதாபம், இனப்பிரச்சினை தொடர்பில் அரசியல்வாதிகளின் நடிப்பு.

இத்தனையையும் அனுபவித்து வாழ்கின்ற வடபுலத்து-யாழ்ப்பாணத்து மக்களுக்கு முக்தி கிடையாதா என்ன?

அதனால்தான் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தால் முக்தி என்று கூறினோம்.

புற்றுநோயில் நாங்களே முதலிடம். புழுதிப் புயலை சுவாசிப்பதிலும் எங்களுக்கே தனியிடம்.

டெங்கு நோயில் நாங்களே சாதனை. மதுபானம், சிகரெட்,சோடா இவற்றின் நுகர்வில் எங்களுக்கு இணை எவரும் இல்லை.

ஒட்டுமொத்தத்தில் தொலைபேசி எங்கள் கலாசாரத்தையும் வருமானத்தையும் கருவறுத்துக் கொள்ள, வாகனங்கள் வெளியேற்றும் கரும்புகை, வெண்புகைப் படலந்தான் எங்கள் மூச்சு.

இதுபோதும்; இந்தப் பிறப்பில் இந்த அனுபவிப்பு.

நிச்சயம் அடுத்த பிறப்பு யாழ்ப்பாணத்தாருக்கு அறவேயில்லை.

# இலங்கையில் அபிவிருத்தி என்ற பெயரில் இந்தியா மாஜாயால வேலை செய்கிறது!

## வைகோ அறிக்கை

இலங்கையில் இலட்சக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு உடந்தையாக செயற்பட்ட இந்திய அரசு, இப்போது அபிவிருத்தி என்ற பெயரில் மாஜாயால வேலைகள் செய்துவருவதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் தமிழினப் படுகொலையை மேற்கொண்ட இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றத்தின் முன்னிறுத்தவும், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தமிழ் ஈழம் மட்டுமே தீர்வு என்பதை நிலைநாட்டவும், ஈழத் தமிழர்கள் மத்தியில் அதற்கான பொதுவாக்கெடுப்பு நடத்தவும், உலகெங்கும் உள்ள ஈழத்தமிழ் உணர்வாளர்களும், மனித உரிமை ஆர்வலர்களும் உறுதிபூண வேண்டும் என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மனித குலத்தின் மனச்சாட்சியை நடுங்கச் செய்யும், கோரமான தமிழினப் படுகொலையை இலங்கை அரசு செய்தது.

இலட்சக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். 2008 ஆம் ஆண்டிலும், 2009 மே 18 வரையிலும், ஈழத் தமிழ் மக்கள் வயது முதிர்ந்தோர், பெண்கள், குழந்தைகள் என அனைவருமே விமானப்படை குண்டு வீச்சாலும், பீரங்கித் தாக்குதலாலும் கொல்லப்பட்டனர்.

இலங்கை அரசு செய்த போர்க் குற்றத்தை விசாரிக்க வேண்டும் என்றும், மனிதவுரிமைகள் அழிக்கப்பட்டதற்கு ஐ.நா மன்றமும், மனித உரிமைக் கவுன்சிலும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், ஜேர்மனி உள்ளிட்ட சில நாடுகள் ஜெனிவாவின் மனிதவுரிமைக் கவுன்சிலில் எடுத்த முயற்சியை, இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் தோற்கடித்து, இலங்கையரசின் இனக் கொலைக் குற்றத்தை மூடி மறைக்க உதவியாகச் செயற்பட்டன.

இலங்கையில் போரின்போது அரச படைகள் நடத்திய குற்றங்களையும், மனிதவுரிமை மீறல்களையும் அறிந்து ஆய்வு செய்து அறிக்கை தர, மார்சுகி தருஸ்மன், யாஸ்மின் சுகா, ஸ்ரிபன் ராட்னர் ஆகிய மூவர் குழுவை ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன் அறிவித்தார்.

முழுக்க முழுக்கப் பொய்களைக் கொண்ட 388 பக்கங்கள் கொண்ட இலங்கையரசின் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையை, கடந்த டிசம்பர் 16 ஆம் திகதி வெளியிட்டது. குறிப்பாக ஐ.நா. மன்றத்தின் மூவர் குழு அறிக்கை, ஆதாரங்களோடு வெளியிட்ட படையினரின் இனக்கொலைக் குற்றங்களை நல்லிணக்க ஆணைக்குழு மூடி மறைந்து விட்டது.

இந்திய அரசுதான் போரை நடத்த உதவியது என்றும் இயக்கியது என்றும், அதனால்தான் புலிகளைத் தோற்கடித்தோம் என்றும், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அமைச்சர்களும் இலங்கை நாடாளுமன்றத்திலேயே கூறினர். ஈழத்தமிழ் இனகொலையின் கூட்டுக் குற்றவாளிதான் இந்திய அரசு ஆகும் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(பா)

# யாழ்ப்பாண சிறுவர் நீதிமன்றம் பெப்ரவரி இறுதி முதல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சிறுவர் நீதிமன்றம் பெப்ரவரி இறுதிப் பகுதி முதல் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். நீதவான் மா. கணேசராஜா தெரிவித்தார்.

கடந்த 20 ஆம் திகதி நீதி அமைச்சின் புதிய செயலாளர் காமினி டி சில்வா மற்றும் நீதிச் சேவை ஆணைக்குழு செயலாளர் கோபல்லாவ ஆகியோருடனான சந்திப்பில் சிறுவர் நீதிமன்றம் திறக்கப்பட்டும் இயங்காமை குறித்து யாழ். நீதவான் மா.கணேசராஜா சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து நீதியமைச்சின் செயலாளர் 2 வாரங்களில் யாழ்ப்பாண சிறுவர் நீதிமன்றம் ஆரம்பிக்கப்படுமென வர்த்தமானி அறிவித்தலை பிரசுரிக்குமாறும் அங்கு இரவு காவல் உத்தியோகத்தரை நியமிக்கவும் அமைச்சு அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

முதன்முதலாக வட மாகாணத்தின் சமுதாய சீர்திருத்தப் பிரிவு சாவகச்சேரி நீதிமன்றில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நிலையில் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய நீதிமன்றங்களில் சமுதாய சீர்திருத்தப் பிரிவு ஆரம்பிக்கப்படுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் மிக விரைவில் பிரசுரமாக உள்ளது. (பா-4)

# புதிய நேரஅட்டவணையில் நெடுந்தீவு படகுச் சேவை

(நெடுந்தீவு)

நெடுந்தீவிற்கும் குறிகாட்டுவானுக்கும் இடையிலான படகுச் சேவை நேற்று முதல் புதிய நேர அட்டவணைப்படி மேற்கொள்ளப்படுவதாக நெடுந்தீவு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்துள்ளார்.

அதன்படி நெடுந்தீவில் இருந்து புறப்படும் படகுச் சேவையில் வட தாரகை II காலை 6.15 மணிக்கும் தனியார் படகு காலை 7.00 மணிக்கும் குமுதினிப் படகு காலை 10.30 மணிக்கும். வட தாரகை II பிற்பகல் 2.00 மணிக்கும் குமுதினிப் படகு பிற்பகல் 3.30 மணிக்கும் சேவையில் ஈடுபடும்.

அதேவேளை குறிகாட்டுவானில் இருந்து குமுதினி படகு காலை 8.30 மணிக்கும். வட தாரகை II காலை 10.00 மணிக்கும் குமுதினி படகுச் சேவை பிற்பகல் 12.30 மணிக்கும் தனியார் படகு பிற்பகல் 4.00 மணிக்கும். வட தாரகை II பிற்பகல் 5.00 மணிக்கும் சேவையில் ஈடுபடும்.

அத்துடன் காலநிலை பாதகமாக இருப்பின் வட தாரகை சேவையில் ஈடுபடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(ச-5)

# நுணாவில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தளபாடங்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினரால் சாவகச்சேரி நகர சபை எல்லைக் குட்பட்டு இயங்கும் நுணாவில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குரிய தளபாட வசதிகளை வழங்கவுள்ளதாக சாவகச்சேரி நகர சபையின் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடந்த வாரம் நடைபெற்ற காலாண்டு செயற்பாட்டு கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்குறித்த சபை எல்லைக்குள் சுகாதார திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை, வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்தடுப்பு நடவடிக்கை போன்ற செயற் பாடுகளுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கப்படவேண்டும். உணவு தயாரிப்பு நிலையம், உணவு கையாளும் நிலையம் ஆகியவை சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப விற்பனை செய்வதை கண்காணித்தல், நகரசபை சிற்றூழியர்களை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல் ஆகிய செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-3,29).

# மஹாகும்பாபிஷேகம்

அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப்பெருமான் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேக நிகழ்வினை முன்னிட்டு ஆலய பிரதம குருவும் ஆதீனகர்த்தாவுமான சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் தலைமையில் பன்னிரு திருமுறை ஓதல் நிகழ்வு இடம் பெறவுள்ளது என திருமுறை பணியிலுள்ள சைவப்புலவர் கந்த. சத்தியதாசன்வழங்கவுள்ளார். (அ,7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



விவேகானந்தர் நமது உள்ளங்களை திறந்து வைத்திருந்தால் உலகிலுள்ள நல்ல நினைவுகள் அனைத்துக்கும் உரிமையுள்ளவர்களாகி விடுவோம்.

கடவுளை நம் தந்தையாக ஒப்புக்கொண்டு விட்டதால் நம்முடன் வாழ்பவர்களை சகோதரர்களாக அங்கீகரிக்க வேண்டும்.அவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்ள வேண்டும்.

பணிவுக்கும் மரியாதைக்கும் பிரதிபலனாக இறைவன் பல நன்மைகளைத் தரவேண்டும் என்று எதிர்பார்க்கும் வரை உண்மையான பக்தி உண்டாகாது.

மனிதன் பிறந்தது இயற்கையை வெல்வதற்காகத்தான்.அதற்குப்பணிந்து போவதற்கல்ல.

சக்தி என்பது நன்மை, தீமை என்னும் இருவழிகளில் வெளிப்படுகிறது. கடவுளும், தீயவனான அரக்கனும் எதிரெதிர் நீரோட்டம் உள்ள ஒரே ஆறுதான். நல்ல வழியில் சக்தியை செலவழிப்பதே உத்தமம்.

இல்லறம் நடத்துபவனுக்கும் துறவறம் பூண்டவனுக்கும் இடையில் உயர்வு தாழ்வு இல்லை. அவரவர் நிலையில் அவரவர் சிறந்தவர்கள்.

பக்தியில் ஈடுபடும் போது கடவுளைத் தனியாகவும் நம்மை வேறாகவும் பிரித்துப்பார்க்க வேண்டும்.

# உலகப் பொருளாதார மாநாட்டில் 110 பேர் கொண்ட இந்திய குழுவினர்

(சென்னை)

சுவிட்சர்லாந்தில் நடக்க உள்ள உலக பொருளாதார அமைப்பின் மாநாட்டில் 110 பேர் கொண்ட இந்திய குழுவினர் பங்கேற்கவுள்ளனர்.

உலகபொருளாதார அமைப்பின் மாநாடு சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள டாவோஸ் நகரில் நாளை தொடங்கி தொடர்ந்து 5 நாட்கள் நடைபெறவுள்ளது. உலக பொருளாதார மாநாட்டில் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் ஆனந்த் சர்மா தலைமையில் 110 பேர் கொண்ட இந்திய பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் பங்கேற்கிறார்கள்.

இந்த மாநாட்டையொட்டி நடைபெறும் முக்கிய நாடுகளின் வர்த்தக மந்திரிகள் கூட்டத்தில் பங்கேற்கும் ஆனந்த் சர்மா தோஹாவுக்குப் பின்பு உலக வர்த்தகத்தின் வருங்காலம் என்ற தலைப்பில் உரையாற்றுவார். (அ-2)

# துறைமுகங்களில் பயங்கரவாத தாக்குதல் பாதுகாப்பு பணியில் ஈடுபட கோரிக்கை

(புவனேஸ்வரி)

பயங்கரவாத தாக்குதல் அபாயம் உள்ளதால் அனைத்து துறைமுகங்களிலும் மத்திய தொழிற்சாலை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த வேண்டும் என தேசிய கப்பல் வாரியம் வற்புறுத்தியுள்ளது.

இது குறித்து தேசிய கப்பல் வாரியத் தலைவர் பி.வி.கே.மோகன் கூறியதாவது,

கடந்த 2008 இல் பாகிஸ்தானிலிருந்து கடல் வழியாக வந்த பயங்கரவாதிகள் மும்பையில் தாக்குதல் நடத்தினர்.

அதனால் தற்போது பெரிய துறைமுகங்களில் மத்திய தொழிற்சாலை பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு பணியில் உள்ளனர். சிறிய துறைமுகங்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படவில்லை.

இப்போது சிறிய துறைமுகங்களையும் பயங்கரவாதிகள் தாக்கும் அபாயம் உள்ளதால் மத்திய தொழிற்சாலை பாதுகாப்பு படையினரை அனைத்து துறைமுகங்களிலும் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என மத்திய அரசை வற்புறுத்தியுள்ளோம்.

விமான நிலையங்களில் இந்த பாதுகாப்பு படையினர் ஏற்கனவே ஈடுபடுத்தப்பட்டு வெற்றி காணப்பட்டிருப்பதால் நாங்கள் இந்த முடிவை எடுத்துள்ளோம். எனகக்கூறினார். (அ-2)

# பாகிஸ்தான் கடற்படையினரால் 31 இந்திய மீனவர்கள் கைது

(பாகிஸ்தான்)

பாகிஸ்தான் கடல் எல்லையை மீறி 31 இந்திய மீனவர்கள் அந் நாட்டின் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய, பாகிஸ்தான் கடல் எல்லை மீறப்படும் விவகாரத்தில் ஆண்டுதோறும் இரு தரப்பிலும் மீனவர்கள் பலர் கைது செய்யப்படுகின்றனர்.

கடந்தாண்டு மட்டும் இவ் விவகாரத்தில் 122 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் கைது செய்தது. அவர்களின் 23 படகுகள் கைப்பற்றப்பட்டன. இம்மாத ஆரம்பத்தில் பாகிஸ் தான் கைது செய்த 179 இந் திய மீனவர்கள் தண்டனைக் காலம் முடிந்ததை அடுத்து விடுவிக்கப்பட்டனர்.

இன்னும் 360 பேர் பாகிஸ்தான் சிறைகளில் உள்ளனர். இந் நிலையில் கடந்த 21 ஆம் திகதி கடல் எல்லையை மீறியதாக 31 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் கடற் பாதுகாப்பு ஏஜென்சி கைது செய்தது.

அவர்களின் 14 படகுகள் கைப்பற்றப்பட்டன. விசாரணைக்காக இவர்கள் கராச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்புட்டுள்ளனர். (அ-2)

# பத்மநாப கோவிலின் பொக்கிஷங்கள் மதிப்பீட்டு பணி பெப்ரவரி பதினேழில்

பத்மநாப சுவாமி கோயிலின் பாதாள அறைகளில் பாதுகாக்கப்பட்டுள்ள பொக்கிஷங்களை மதிப்பீடு செய்யும் பணி எதிர்வரும் பெப்ரவரி 17 ஆம் திகதி ஆரம்பமாகும் என உச்சநீதிமன்றம் நியமித்த மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் வேலாயுதன் நாயர் தெரிவித்துள்ளார்.

இக்கோவில் பாதாள அறைகளில் பலகோடி ரூபாய் மதிப்புள்ள பொக்கிஷங்கள் பல நூற்றாண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றை மதிப்பீடு செய்து அறிக்கைதாக்கல் செய்ய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெப்ரவரி 17 அல்லது 18 ஆம் திகதி மதிப்பீட்டு பணி ஆரம்பமாகும். தொடர்ந்து பணிகளை நடத்தி திட்டமிட்ட நாளுக்கு முன்பாகவே முடிக்கப்படும். அதற்கு முன்பாக மூன்று நாட்கள் ஒத்திகைப் பணிகள் நடைபெறும். முன்னதாக அடுத்த மாதம் 9 ஆம் திகதி மீண்டும் மதிப்பீட்டுக் குழு மற்றும் கண்காணிப்பு குழுவினரின் கூட்டம் நடத்தப்படும். மதிப்பீட்டுப் பணிக் காக கெல்ட்ரான் நிறுவனம் சில பொருட்களை வழங்கியுள்ளது. மேலும் பல முக்கிய கருவிகளையும் பொருட்களையும் விரைவில் வழங்கும் என அவர் தெரிவித்தார். (அ-2)

## பாரதச் செய்தி

# திருக்குறளை இந்திய நாட்டின் தேசிய நூலாக அறிவிக்க வேண்டும்

## தலைநகர் தமிழ்ச்சங்கம் கோரிக்கை

(சென்னை)

திருக்குறளை இந்தியாவின் தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என்று தலைநகர் தமிழ்ச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து சென்னையில் தலைநகர் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் கு.வெள்ளச்சாமி கடந்த சனிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது,

தமிழை இந்தியாவின் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக உள்ளது.

இதனை வலியுறுத்தி தமிழ் மைய ஆட்சிமொழி திருக்குறள் தேசிய நூல் மாநாடு ஜனவரி 25 ஆம் திகதி சென்னையை அடுத்த வண்டலூரில் உள்ள தலைநகர் தமிழ்ச் சங்க வளாகத்தில் நடைபெறவுள்ளது என்றார் அவர். (அ-2)

# இருநாட்டு உறவுகளைப் பலப்படுத்த குடியரசு தினத்தில் தாய்லாந்து பிரதமர்

(பாங்கொக்)


இந்தியா உடனான பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் நாளை மறுதினம் நடைபெற உள்ள குடியரசு தின விழாவில் தாய் லாந்து பிரதமர் யிங்லுக் ஷினவத்ரா கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் தாய்லாந்து பிரதமர் யிங்லுக் ஷினவத்ரா தலைமை விருந்தினராக கலந்து கொள்ள உள்ளார்.

இந்தியாவுக்கு கடந்த 30 ஆண்டுகளில் வந்த தலைமை விருந்தினரில் இவர்தான் மிகவும் இளையவர் என்பது குறிப்பிடத்தக்கது. யிங்லுக் ஷினவத்ராவுடன் அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் தொழிலதிபர்கள் ஆகியோர் அடங்கிய 100 பேர் கொண்ட குழுவும் வருகிறது.

இவரது இந்தப் பயணத்தில் இரு தரப்பு பொருளாதார மற்றும் அரசியல் ரீதியிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் சில பேச்சுவார்த்தைகள் நடக்க உள்ளன. இதில் வர்த்தகம், அறிவியல், தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் தூதரகம் ஆகிய துறைகள் முக்கிய இடம் பெறுகின்றன. அத்தோடு குற்றவாளிகள் அல்லது கைதிகளை நாடு கடத்துவது தொடர்பான புதிய ஒப்பந்தம் ஒன்றும் கையெழுத்தாகிறது.

இது பற்றிய ஒப்பந்தம் ஒன்று 1902 இல் கையெழுத்தானது. அதன்பின் 1982 இல் இதற்காக ஒரு தற்காலிக ஏற்பாடு மட்டும் செய்யப்பட்டிருந்தது. பிரதமர் அளவில் நடக்கும் பேச்சுவார்த்தையில் இந்தாண்டின் இறுதிக்குள் விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம்



மேற்கொள்வதற்கான முயற்சிகள் நடக்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது. இவை தவிர கடற்கரை பாதுகாப்பு ஒத்துழைப்பு, கடற்கொள்கை வழக்குகள் ஆகி யவை உள்ளிட்ட பாதுகாப்பு தொடர்பான விடயங்களும் விவாதிக்கப்படவுள்ளன. (அ-2)

# திருச்சி விமான நிலையத்திற்கு 10 ஆயிரத்து 500 அடி ஓடுதளம்

(சென்னை)

இந்திய மாநிலமான தமிழ் நாட்டின் திருச்சி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றும் முதற்கட்டமாக 10 ஆயிரத்து 500 அடி நீளத்துக்கு ஓடுதளம் அமைக்கப்படும் என்று திருச்சி விமான நிலைய விரிவாக்க ஆலோசனை குழுத் தலைவர் எம்.பி. குமார் தெரிவித்துள்ளார்.

திருச்சி விமான நிலையத்துக்கு இலங்கை, சிங்கப்பூர், அரபுநாடுகளில் இருந்து தினந்தோறும் விமானங்கள் வந்து செல்லும் நிலையில் 8 ஆயிரம் அடி நீளம் மட்டுமே ஓடுதளம் உள்ளதால் சர்வதேச விமான நிலைய அந்தஸ்து வழங்கப்படவில்லை.

குறைந்த பட்சம் 9 ஆயிரம் அடி நீளத்துக்கு ஓடுதளத்தை உயர்த்தினால் சர்வதேச விமான நிலைய அந்தஸ்து கிடைக்கும் என்பதால் திருச்சி விமான நிலைய விரிவாக்கத்துக்காக திருச்சி எம்.பி. குமார் தலைமையில் ஆலோசனைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான விரிவாக்க ஆலோசனைக் கூட்டம் ஆலோசனைக்குழு தலைவர் திருச்சி எம்.பி. குமார் தலைமையில் நடந்தது.

இது குறித்து ஆலோசனைக்குழு தலைவர் கூறியதாவது,

திருச்சி விமான நிலைய விரிவாக்கத்துக்காக மொத்தம் 510 ஏக்கர் தேவைப்படுகிறது.

விமான நிலையம் அருகே உள்ள 164 ஏக்கர் இராணுவத்திற்கு சொந்தமான இடத்தை பெற இராணுவ மேலிடத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இடத்தை தர அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். இன்னும் ஒரு வாரத்தில் அவர்கள் பணியை தொடங்குகின்றனர் என்று தெரிவித்துள்ளார். (அ-2)

# இந்திய- அமெரிக்க இராணுவ பயிற்சியில் அமெரிக்காவின் யுத்த டாங்கிகள்

(புதுடில்லி)

இந்தியாவில் நடக்கும் இந்திய-அமெரிக்க இராணுவ வீரர்களுக்கான யூத் அபியாஸ் எனும் கூட்டுப்பயிற்சியில் முதல்முறையாக அமெரிக்க டாங்குகள் பங்கேற்க உள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் பயிற்சி ராஜஸ்தானில் உள்ள மகாஜன் இராணுவ பயிற்சி மையத்தில் எதிர் வரும் மார்ச் மாதம் தொடங்கவுள்ளது.

இந்தப் பயிற்சியில் 200 இற்கும் மேற்பட்ட அமெரிக்க இராணுவ வீரர்களும் பங்கேற்கின்றனர். இந்தப் பயிற்சிக்குப் பின் ஜம்மு-காஷ்மீரில் பாதுகாப்பில் ஈடுபட்டு வரும் தரைப்படையினர் கலிபோர்னியாவுக்கு சென்று அமெரிக்க வீரர்களுடன் சத்ருஜீத் எனும் பயிற்சியினை மேற்கொள்ள உள்ளனர்.

இதையடுத்து அமெரிக்காவின் சிறப்பு பாதுகாப்பு படையினர் 60 பேரும் அதே அளவில் இந்திய சிறப்பு படையினரும் இணைந்து ஓகஸ்ட் மாதத்தில் உத்தரகண்ட் செபாட்டியாவில் உள்ள மலைப்பகுதிகளில் பயிற்சி மேற்கொள்ள உள்ளனர். மேலும் இந்த ஆண்டில் இரு நாட்டு கப்பல் படை வீரர்கள் இணைந்து பயிற்சியில் ஈடுபட திட்டமிட்டுள்ளனர்.

(அ-2)

# பதவி விலகினார் டில்சான்;

# புதிய தலைவர் மஹேல!



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியில் இருந்து திலகரட்ண டில்சான் இராஜினாமா செய்துள்ளார். இது தொடர்பிலான அறிவிப்பு கடிதத்தை அவர் சிறிலங்கா கிரிக்கெட் நிர்வாகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்நிலையில் இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக மஹேல ஜெயவர்த்தனா நியமிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா கிரிக்கெட் தகவல்கள் தெரிவித்தன. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் பின்னர் குமார் சங்ககார இராஜினாமா செய்ததை அடுத்து திலகரட்ண டில்சான் அணித்தலைவராக நியமிக்கப்பட்டார். எனினும் திலகரட்ண டில்சான் தலைமையிலான இலங்கை அணி இங்கிலாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடர்) மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்திலும் சொந்த மண்ணில் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரிலும் தோல்வியைத் சந்தித்தது. மேற்குறிப்பிட்ட நான்கு நாடுகளுக்கும் இடையில் இலங்கை அணி டெஸ்ட் மற்றும் சர்வதேச ஒரு நாள் போட்டித் தொடர்களிலும் தோல்வியைச் சந்தித்தது.

இதில் கடந்த மே மாதம் முதல் திலகரட்ண டில்சான் தலைமை தாங்கிய 11 டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணி ஒன்றில் வெற்றியையும் (தென்னாபிரிக்காவுடனான டர்பன் டெஸ்ட்) 5 போட்டிகளில் தோல்வியும் பெற்றது. வெற்றி சராசரி 33.06 சதவீதமாகும்.

அத்துடன் 21 ஒருநாள் போட்டிகளில் திலகரட்ண டில்சான் தலைமையிலான இலங்கை அணி 8 போட்டிகளில் வெற்றியைப் பெற்றதுடன் 13 போட்டிகளில் தோல்வியைச்சந்தித்தது. வெற்றி சராசரி 20.95 சதவீதமாகும்.

பாகிஸ்தானுடனான கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி தோல்வியைச்சந்தித்த நிலையில் தென்னாபிரிக்கா தொடரில் சாதிப்



போம் இல்லையேல் அணித்தலைவர் பதவியை இராஜினாமா செய்வேன் என டில்சான் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் தென்னாபிரிக்கா அணியுடனான தொடர் நேற்று முன்தினம் முடிபடைந்ததும் தனது இராஜினாமா கடிதத்தை திலகரட்ண டில்சான் சிறிலங்கா கிரிக்கெட் ( இலங்கை கிரிக்கெட் சபை) நிர்வாகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவராக மூத்தவீரர் மஹேல ஜெயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார் என சிறிலங்கா கிரிக்கெட் தகவல்கள் தெரிவித்தன.

டெஸ்ட், சர்வதேச ஒருநாள் மற்றும் இருபது - 20 என மூன்று வகையான போட்டிகளுக்கும் மஹேல ஜெயவர்த்தன தலைமை தாங்குவார் எனவும் தகவல்கள் தெரிவித்தன.

34 வயதான மஹேல ஜெயவர்த்தன, இலங்கை அணிக்கு கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை தலைமை தாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.க.தலை...

அனைத்தப் பிரிவினரும் ஒன்றிணைவது அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

கட்சிக்காக கடமையைச் செய்வதற்கு பதவி அவசியம் இல்லை எனவும் அதனால் தான் எந்தவொரு பதவியையும் எதிர்பார்க்கவில்லை எனவும் செயற்குழு அங்கத்தவர் பதவியை ஏற்கப் போவதில்லை எனவும் அவர் கூறினார்.

கட்சியின் தலைமைத்துவத்தை கைப்பற்றுவதற்கான நோக்கத்தை கொண்டிருக்கவில்லை எனவும் மஹாநாயக்க தேரர் மற்றும் பலர் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்ததன் காரணமாகவே தலைவர் பதவிக்கு தான் போட்டியிடத் தீர்மானித்ததாகவும் கரு ஜயசூரிய தெரிவித்தார்.(எ-5)

## ஒவ்வொரு இளைஞர்களின்...

யுறுத்தினேன். அதற்கு அவர் சொன்னார்; இந்த உலகத்தில் நமக்குப் பல்வேறு பிரச்சினைகள், நம்பிக்கையின்மை, சுயநலம், சமூக பொருளாதார வேறுபாடு, கோபம், வெறுப்பு அதன் மூலமாக வன்முறை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் புத்த தவஸ்தலம் என்ன செய்தியை பரப்புகிறது என்றால் நாம் ஒவ்வொருவரும் நான், எனது என்ற எண்ணத்தை நம் மனதில் இருந்து அகற்றினால், நம்மிடம் உள்ள தற்பெருமை மறையும். தற்பெருமை மறைந்தால் மனிதர்களுக்கு இடையேயான வெறுப்பு அகலும்.

வன்முறை எண்ணங்கள் நம்மை விட்டு மறைந்தால் அமைதி நம் மனத்தை தழுவும்.

என்ன ஒரு அருமையான விளக்கம். ஆனால் எப்படி நா்ன்,எனது என்ற எண்ணத்தை நம் மனதில் இருந்து அகற்ற முடியும்? எவ்வளவு கஷ்ட மான விடயம்.

இதற்கான பக்குவமான கல்வி முறையை எப்படி நாம் கொண்டு வருவது என்பதுதான் நம்முடையே உள்ள சவால்.

அந்த சவாலை எப்படி சமாளிப்பது, அமைதியை எப்படி அடைவது என்ற என் கேள்விக்கு விடை தேடிய என் பயணம் தொடர்ந்தது.

நான் பல்கேரிய நாட்டிற்குச் சென்றேன்.அங்கு கிறிஸ்தவ தவஸ்தலத்திற்குச் சென்றேன்.

தாவங்கில் கிடைத்த செய்தியின் தொடர்ச்சியாக அங்குள்ள முதிர்ந்த பாதிரியார் ஒரு வாக்கியத்தை தந்தார். மன்னிப்பு என்ற உன்னதமான வாக்கியத்தைத் தந்தார்.

மன்னிப்பு என்பது எப்படி ஒரு வாழ்க் கையை பக்குவப்படுத்தும் என்பதை பற்றிய அருமையான விளக்கம் பெற்றேன்.

### மனசாட்சியின் மாட்சி

சமீபத்தில் சுவாமி சமர்பண் எழுதிய Tiya: A Parrot's Journey Home என்ற புத்தகத்தை படித்தேன். சில புத்தகங்கள் என்னை மிகவும் கவர்ந்தவை எனக்கு மிகவும் நெருக்கமானவை. அந்த புத்தகங்கள் எனது தனிப்பட்ட நூலகத்தை அலங்கரிக்கும். அப்படி ஒரு புத்தகம் தான் இந்த புத்தகம். தியா என்ற இந்த புத்தகம் மனச்சாட்சியை பற்றியதாக இருப்பதால் நம் ஒவ்வொருவரையும் தொடுகிறது. இதை மிக அழகாக எழுதியிருக்கிறார் சுவாமி சமர்பண்.

எப்படி நல் மனசாட்சி கொண்ட ஒரு அருமையான பச்சைக்கிளியின் வாழ்வு தியாவின் வாழ்க்கையை மாற்றியது என்பது தான்.

கோபம் விவேகத்திற்கு அழகல்ல. இதை பச்சைக்கிளி மட்டும் உணர்ந்து கொள்ளவில்லை. ஆனால் இந்த புத்தகத்தை படிக்கும் ஒவ்வொரு வாசகரும் உணர்வார்கள்.

மனசாட்சி என்பது இதயத்தின் ஆத்மா மனித இதயத்தில் இருந்து சுடர்விட்டு வழிகாட்டும் ஒரு பேரொளி. வாழ்க்கை எப்படி உண்மையோ அதைப் போன்றது அது. நேர்மைக்கு புறம்பாக சிந்தித்தாலோ, நடந்தாலோ அது தன் எதிர்ப்பைக் காட்டும். மனசாட்சி என்பது நமது பாரம் பரியத்தில் வந்துதித்த ஒன்று. தப்பையும் சரியானவற்றையும் நமக்கு சரியான நேரத்தில் உணர்த்தும் ஒரு அறிவார்ந்த மரபணு உண்மை. நமது குற்றங்களை பதிவு பண்ணும் ஒரு வாழ்க்கை புத்தகம். சார்பற்ற சாட்சியாக மனசாட்சி விளங்குகிறது. அது நம்மை பயமுறுத்தும், நம்பிக்கையை கொடுக்கும், பாராட்டும், தண்டனை அளிக்கும், நம்மைக் கட்டுக் குள் வைக்கும்.

ஒரு தடவை மனசாட்சி உறுத்தினால் அது எச்சரிக்கை. மறுமுறை உறுத்தினால் தண்டனை. கோழை கேட்பான் இது பாதுகாப்பானதா? பேராசைக்காரன் கேட்பான் இதனால் எனக்கு என்ன இலாபம் என்று. தற்பெருமைக்காரன் கேட்பான் நான் மகானாக முடியுமா? என்று இச்சையானவன் கேட்பான் அதில் என்ன சந்தோஷம் உண்டு என்று. ஆனால் மனசாட்சி ஒன்றுதான் கேட்கும். அது சரியா என்று. ஆனால் ஒட்டுமொத்தமான பதில் என்ன?- தன் மனசாட்சிப்படி நேர்மையாக நடப்பது ஒன்றுதான். இதில் இருந்து என்ன விளங்குகின்றது என்றால் சிறு வயதில் இளம் மனதில் விதைக்கும் விதை எப்படிப் பட்ட பலனை தருகின்றது. என்பதற்கு நம்மில் அனேக உதாரணங்கள் உள்ளது. எனவே தான் நாம் இளைஞர்களை பக்குவப்படுத்தி தயார் பண்ணினால் தான் நமது இலட்சியமான வளமான நாட்டை உங்களால் வளமான இலங்கையை அடுத்த 15 ஆண்டுகளுக்குள் மாற்ற முடியும்.

எனவே மாணவர்களே! உறக்கத்திலே வருவதல்ல கனவு. உன்னை உறங்கவிடாமல் செய்வது தான் கனவு. எனவே கனவு காண்பது என்பது ஒவ்வொரு குழந்தையின் இளைஞர்களின் வாழ்க்கையின் ஒரு முக்கியமான விடயம். ஒவ்வொரு இளைஞர்களுக்கும் வாழ்வில் ஒரு இலட்சியம் வேண்டும். அந்த இலட்சியம் நிறைவேற கடுமையாக உழைக்க வேண்டும். தொடர்ந்து அறிவைப் பெற அதை தேடி சென்றடைய வேண்டும். விடாமுயற்சி. வேண்டும். அதாவது தோல்வி மனப்பான்மையை தோல்வியடைச் செய்ய வேண்டும். இந்த நான்கு குணங்களும் இருந்தால் கனவு நனவாகும். நீங்கள் எல்லாம் வெற்றியடைவீர்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களே உங்களுக்கும் உங்களது எதிர்கால இலட்சியத்திற்கும் உங்கள் நாட்டிற்கும் எனது நல்வாழ்த்துக்கள்.


## மாநகரசபை யாழ்ப்பாணம்

## பொது அறிவித்தல் - 2012

1. 2012 ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப்பத்திர உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிறுவனங்களும் 2012 ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமக் கட்டணங்களை 31.03.2012ற்கு முன்னர் செலுத்தி அதற்கான உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

2. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்

எமது சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பொது வீதிகளின் இருமருங்கிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும், காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களை உரிய கட்டணங்களைச் செலுத்தி சபையின் அனுமதியை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள், நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் சபையினால் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

3. துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம் பெறல் - 2012

2012 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி, மிருகங்களுக்கான உரிமத்தை பங்குனி 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

திருமதி யோ. பற்குணராஜா
மாநகர முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(C-5654)

## ரணில் - மோடி பேச்சு



உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற் கொண்டு இந்தியா சென்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க குஜராத் மாநில முதலமைச்சர் நரேந்திர மோடியைச் சந்தித்து கலந்துரையாடியுள் ளார்.

இலங்கையில் அதிகாரப்பகிர்வு மற்றும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு குஜராத் மாநில முதலமைச்சர் நரேந்திர மோடிக்கு ரணில் விக்கிரமசிங்க இதன்போது அழைப்பு விடுத்துள்ளார். ரணில் விக்கிரம சிங்கவின் இந்த அழைப்பை நரேந்திர மோடி ஏற்றுக்கொண்டுள்ளதாக இந்திய ஊடகங் கள் தெரிவித்துள்ளன. (எ-5)

# த.தே.கூவை வலுப்படுத்த வேண்டும்

## சுரேஷ் எம்.பி தெரிவிப்பு

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய ஐந்து கட்சிகளும் இணைந்து தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பை ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்வதென்றும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மாவட்ட கிளைகளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் நிறுவுவது என்றும் நேற்று முன்தினம் ஞாயிறு அன்று வவுனியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சா ளரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப் பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரி வித்தார்.

இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கல நாதன், சிவசக்தி ஆனந்தன், வினோ நோகராதலிங்கம் ஆகியோர் கலந்து கொண் டனர்.

எதிர்வரும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய மாநாடு நடத்தப்படும் என்றும் மாநாடு நடத் தப்படும் இடம் பின்னர் தீர்மானிக்கப்படும் என்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரி வித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய மாநாடு கிளிநொச்சியில் நடைபெறும் என சில இணையத்தளங்கள் வெளியிட்ட செய்தி தவறானதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இன்று இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையில் இக்கட்டான சூழல் ஏற்பட்டிருக்கிறது. இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தையில் காத்திரமான போக்கை கடைப்பிடிக்காத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாகவும் சுரேஸ் பிரேமச் சந்திரன் தெரிவித்தார். (எ-5)

## இடையூறு விளை...

மேடையில் ஏறி விழுந்து கிடந்தார்.

பின்பு குறித்த நபரை பாதுகாப்பு உத்தி யோகத்தர்கள் அந்த இடத்தை விட்டு அப்பு றப்படுத்தினர்.

டாக்டர் அப்துல் கலாம் உரையாற்ற ஆரம்பித்த போது வருகை தந்திருந்த ஏனைய விருந்தினர்களுக்கு வணக்கம் தெரிவித்த போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு வணக்கம் கூறவில்லை என குறித்த நபர் தெரிவித்திருந்தார்.

இருப்பினும் அமைச்சர் டக்ளஸ் தேவான ந்தா இந்த நிகழ்வில் பங்கு பற்றியிருக்கவில்லை.

இவ்வாறு குறித்த நபர் கூறியபோது, எல் லோருக்கும் வணக்கம் உங்களுக்கும் வண க்கம் என டாக்டர் அப்துல் கலாம் தெரிவித் தார். (ச-6)

## இல்லாத அதி...

தற்போது 13-ம் திருத்தச் சட்டத்தின் மூலம் தொடர்பிலும் அதன் அதிகாரங்கள் தொடர் பிலும் பலரும் பல்வேறு கருத்துக்களை வெளியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## பிரபாகரனை...

பிரபாகரனால் படுகொலை செய்யப்படலாம் என்ற நிலையிலேயே கருணா புலிகள் இயக் கத்தில் இருந்து பிரிந்தார்.

2004 ஆம் ஆண்டு மார்ச் 19-ம் திகதி சென்னை துணைத் தூதரகத்தில் இருந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சுக்கு அனுப் பி வைக்கப்பட்ட இராஜதந்திர ஆவண மொன் றில் இருந்து விக்கி லீக்ஸ் மூலம் இத்தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. (ச-5)

## கடின உழைப்பு...

நான் எண்ணுவதை அடைந்தே தீருவேன் என இலட்சியத்துடனும் விடாமுயற்சியுடனும் செயற்பட்டால் வெற்றி வந்தே சேரும்.

தனித் தன்மை வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும். வைத்தியர்கள், பொறியிலாளர்கள் யாராக வரவேண்டுமானாலும் கடின உழை ப்பு இருந்தால் முடியும்.

வாழ் நாள் முழுவதும் படித்துக்கொண்டே இருங்கள். அறிவு என்பது அழிவை வரவிடாது பாதுகாத்து காத்துக் கொள்ளும்.

கற்பனை சக்தி கற்றலை வளர்க்கும். கற்றல் சக்தி அறிவை வளர்க்கும். அறிவு மகா னாக்கும்.

முடியாது என்று எல்லோரும் சொல்வதை முடியுமென்று செய்ய முற்பட வேண்டும். புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள் வேண்டும். தோல்வியையும் தோல்வியடைச் செய்து நாட்டை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும்.

மனதில் உறுதியிருந்தால் வெற்றியடை வீர்கள். மேலும் யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரி 121 ஆண்டுகள் தமது கல்விச் சேவை யை தொடர்ந்து வருகிறது. பூமி தன்னைத்தா னே சுற்றுவதற்கு 24 மணி நேரம் செல்லும். அதேபோல் 121 ஆண்டுகள் இந்தக் கல்லூரி சுற்றி பல மாணவர்களை அறிஞர்கள் ஆக்கியுள்ளது.

அதற்கு இந்தக் கல்லூரியை சார்ந்தவர் கள் அனைவருக்கும் மனமார்ந்த நல்வாழ்த் துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

உரை முடிந்தவுடன் ஆறு மாணவர்களு க்கு தன்னிடம் கேள்வி கேட்கும் வாய்ப்பினை டாக்டர் அப்துல் கலாம் வழங்கியி ருந்தார்.

இதன் போது 13 வயதேயான மாணவன் ஒருவன், நான் உங்களைப்போல் ஆக வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்? எனக் கேள்வி கேட்டிருந்தான்.

இந்தக் கேள்விக்கு பதில் அளித்த டாக்டர் அப்துல் கலாம், இலட்சியம் வேண்டும்; அறிவை வளர்க்க வேண்டும்; அறிவை பயன்படுத்த வேண்டும்; கடின உழைப்பு வேண்டும். இந் நான்கும் இருந்தால் நீ யாராக வேண்டு மானாலும் வர முடியும் என தெரிவித்தார்.

அதேவேளை இன்னொரு மாணவன், நீங்கள் யாராக வர வேண்டும் என்று ஆசைப் பட்டீர்கள் எனக் கேட்டபொழுது நான் விமா னியாக வரவேண்டும் என ஆசைப்பட் டேன்.ஆனால் கிடைக்கவில்லை. இருப்பி னும் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்பு விமா னம் ஓட்டிப்பார்த்தேன் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## சர்வதேச விசாரணை...

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கத்துக்கு அழுத்தங்களைஏற்படுத்தும் வகையிலேயே இந்த வட்ட மேசைக் கலந்துரையாடல் இடம்பெற்றதாக தெரிய வருகின்றது.

இந்த வட்ட மேசைக் கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கான அமெரிக்கத் தூதுவர் எலீன் சம்பெர்லெய்ன், கனேடிய நிரந்தரப் பிரதிநிதி எலிஸா கொல்பேர்க், பிரித்தானிய நிரந்தர பிரதிநிதி பீற்றர் கொடஹாம், நோர்வேஜிய நிரந்தரப் பிரதிநி ஸ்டீபன் கொங்ஸ்ராட், பிரான்ஸ் நிரந் தரப் பிரதிநிதி ஜீன் - பப்ஸ்ரி மத்தி, ஜேர்மனின் நிரந்தரப் பிரதிநிதி ஹான்ஸ் சூமேச்சர், அவுஸ்திரேலிய நிரந்தரப் பிரதிநிதி பீற்றர் வூல் கொட், ஐரோப்பிய ஒன்றியத்தின் நிரந்தரப் பிரதிநிதி மேரி அஞ்சலா சப்பியா,

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணை யாளரின் செயலகப் பிரதிநிதி றொரி மொங்ரோசன், சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி பீற்றர் ஸ்பி லின்னரர். ஆசிய அமைப்பின் பிரதிநிதி பூஜா பட்டேல், மனிதவுரிமைகள் கண்காணிப்பகத்தின் பிரதிநிதி விலிப் பிடாம், சர்வதேச நீதியாளர் ஆணைக்குழுவின் பிரதிநிதி அலெக்ஸ் கொண்டே சர்வதேச உலக நோக்கின் பிரதிநிதி பெரிஸ் கைன் ஆகியோர் கலந்து கொண்டர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப்போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் தாருஸ்மன் தலைமையில் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு சர்வதேச போர்க் குற்ற விசாரணைகளை வலியு றுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரி மைகள் ஆணைக் குழுவின் அடுத்த கூட்டத் தொடரில் எல்லா விதமான சர்வதேச அழுத் தங்களையும் எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயாராக உள்ளதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரி வித்துள்ளார். (எ-05)

31ஆம் நாள் நினைவலைகள்



தாயின் கோயிலாய் 06.01.1948

இதய தெய்வமாய் 25.12.2011

தங்கவடிவேலு பவளராணி

பவளச்சிரிப்பில் பாசத்தாயாய்
குடும்பக் கோவிலில் குலவிளக்காய்
மங்கையரில் திலகமாய்
ஊருக்கு உத்தமியாய்
உன்னத வாழ்வு வாழ்ந்து 25.12.2011 இல் சிவபதமடைந்த
அன்புத் தெய்வத்தின் இறுதித்துயரில் பங்கு கொண்ட
இதயங்களுக்கு நன்றி கூறுகிறோம்.

இன்று (24.01.2012) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்

பவளகிரி,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

புவியியல்
N. பாபு
2014 A/L Mon, Wed - 5pm
2013 A/L Mon, Wed - 4pm
2012 A/L & Day Mon, Wed - 3pm
♦ அலகு ரீதியிலான மீட்டல்.
♦ MCQ தொடர்பான பரீட்சைகள்
றோயல் அக்கடமி
பிரதான வீதி, சங்கானை (7358)

A/L DAY CLASS
தமிழ்
B. பத்மநாதன்
நேர அட்டவணை அலுவலகத்தில்
றோயல் — சங்கானை (7358)

வர்த்தகப் பிரிவு
2014 A/L
பொருளியல் - S. வரதராஜன்
கணக்கீடு - A.P. பகீரதன்
வணிகக்கல்வி - V. முரளி
♦ வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
♦ நேர அட்டவணை அலுவலகத்தில்
றோயல் அக்கடமி
பிரதான வீதி, சங்கானை (7358)

அவுஸ்திரேலியா குடும்ப விசா
அவுஸ்திரேலியா குடும்பத்துடன் 5 வருட கால
விசாவிற்கு இலவச சட்ட ஆலோசனை
திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212219016 (7357)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.